

ஸ்ரீ ராமஜயம்

திருஞானமுத்திரைக் கோர்வை, 1.

சுவாமி நம்மாழ்வார்
நூற்றெட்டுத் திருப்பதி தாலாட்டு

சுவாமி நம்மாழ்வார்
பொலிந்து நின்ற பிரான் படங்களுடன்

உபயகவி அப்பா இயற்றியது
(திருக்குருகூர் நம்மாழ்வார் முன்பு சேவிக்கப்பட்டுவருவது)

பதிப்பாசிரியன்:

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸன்
திருஞானமுத்திரைப் பிரசுராலயம்
ழ்வார்திருநகரி

 1967 மே 18 [விலை ரூ. 1—00

14-3

ஸ்ரீ ராமஜயம்

திருஞானமுத்திரைக் கோர்வை, I.

சுவாமி நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதி தாலாட்டு

(சுவாமி நம்மாழ்வார் பொலிந்து நின்றபிரான் படங்களுடன்)

உபயகவி அப்பா இயற்றியது

(திருக்குருகூர் நம்மாழ்வார் முன்பு சேவிக்கப்பட்டு வருவது)

மூன்றும் பதிப்பு

பதிப்பாசிரியன்:

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸன்

திருஞான முத்திரைப் பிரசுராலயம்
ஆழ்வார்திருநகரி

Copy Right] 18—5—1967 [விலை ரூ. 1—00

ஸ்ரீ ராமஜயம்.

பதிப்புரை

பாரத கல்விப் ப்ரபந்த பொருள்அனைத்தும்
நேராக முன்வந்து நிற்குமே — பேராது
தேவீறு கொண்ட திருமாலை முத்தமிழ்தேர்
நாவீற னைத்துதித்த நாள்.

தாது அளைந்து இனவண்டு ஊது பைந்துளபத் தாரினன், கறைக்களன் ஊர்தி, போதவற்கு அருநான்மறை அ(ன்)ன வடிவில் போதம் உற்றிட அருள்புனிதன், ஆதவன் ஒளிகெட்டு இரவுஉறப் பகலில் ஆழிகொண்டு ஏறிதருகபடன், வாதம் உண் அரவப் பணைவி நடித்த மாயவன் பரவாசுதேவன். செங்கதிர் மதி மின்மினி என ஒளிகொள் சேண்உறு நித்தியர் அன்றிப், பங்கயன் அரன் இந்திரன் முதல் அறியாப்பதத்தவன் உளம் மகிழ்ந்து, உலகோர் நம்கழல் நிலைபெற்று அவர்தம் நவைகொள் வெவ்வினைத் தொடர் அகலச், சங்கைஇல் அவதாரங்கள் செய்து, உரைத்த சதுமறை விதிவழி அனைத்தும்; கற்றிடற்கு உரியர் எவர்க்கும் உள்பொருள்கள் கசடுஅற வெளிப்படல் அரிதாய், மற்றுளோர்க்கு அறம் இலது, ஆகில், அவர் எவ்வாறு உய்வர் என; அநந்தகருட விஷ்வக்ஸேனுதியார்களுடன், தாமே இப்பூவுலகில் தாம்ப்ரவன்னிக்கரையிலுள்ள குருகாபுரி க்ஷேத்திரத்தில் காரிமஹாராஜனுக்கு புத்திரராகத் திருஅவதரித்தருளினர். இவருடைய வைபவாதிசயங்களையும் இவர் மொழிந்த திருவாய்மொழியின் விசேடங்களையும் கூர்ந்தனுபவித்த பூர்வசார்யர்கள் வடமொழி தென்மொழி கலந்த மணிப்பிரவாள நடையில் மற்றைய ஆழ்வாராசாரியாள் அவதாரராதிசயங்களையும் சேர்த்து குருபரம்பரா ப்ரபாவங்கள் பலபடியாக ஆக்கி அருளினர்கள். இவைகளை சாங்கோபமாக அநுபவித்தறிந்து மிகுதியான பயன்பெற்ற தமிழ்க் கவிகள், சுத்தத் தமிழ்செய்யுட்களால் ஆழ்வார்கள் ஆசாரியார்கள் வைபவங்களைச் செய்தருளியுள்ளார்கள். பலபல தமிழ்க் கவிகளும் தங்கள் தங்கள் பக்தி அறிவு, ஆற்றல், ஆநுபவங்களுக்குத் தக்கவாறு நம்மாழ்வார் பெயரில் பலபல அரிய பெரிய கருத்துக்களுடன் தமிழ்ப் பிரபந்தங்கள் இயற்றி உலகோர் உய்யுமாறு உபகரித்துள்ளார்கள். அவைகளில் இதுவரை வெளிவந்தவைகள் நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டுவன:

"கம்பன் அந்தாதி" கவிச்சக்கரவர்த்தி கம்பர் தம் இராமாயணம் லோகத்தில் பிரகாசிக்க சடகோபரந்தாதி (இன்று அச்சில் வரும் பெயரால்) இயற்றி நம்மாழ்வார்க்ருபை பெற்றூர். ஆழ்வார்திருநகரி பிரதேசத்தில் "கம்பனந்தாதி" என்றே இன்றும் வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன் திருவத்யேன உத்ஸவத்தில் பொலிந்து நின்றபிரான் நம்மாழ்வார் கோஷ்டியில் அர்ச்சகர்களால் முழுதும் சேவிக்கப்பட்டு, திருச்செவிசாத்தி அருளுவது இன்றும் அநுஷ்டானத்தில் உள. கோஷ்டிகளில் சில சில சந்தர்ப்பங்களில் அருளப்பாடும் சாதித்தருளப் பிரார்த்திக்கும் அரையர்களால் சிற்சில கம்பனந்தாதிப் பாசுரங்கள் விண்ணப்பிப்பதும் அநுபவிக்கத்தக்கது. தமிழ்ப் பிரபந்த கர்த்தாக்கள் இவருக்குக் காப்புச் சொல்லித்தான் தங்கள் பிரபந்தங்களை ஆக்கி உள்ளார்கள். இவரிடம் ஈடுபாடு உடையவர்கட்கு இவர்ப்ப்ரத்யக்ஷயமாகி, அவரவர்கள் குறையைப்போக்கி ஈறில் இன்பம் அளிக்கிறார் என்பதும் அறிந்து இன்புறதக்கன. இவைகளைக் கூறில் விரியும் ஓரிரண்டு அனுபவிக்கலாம். சங்கத்தார் எதிர்த்து இவர்கவியை ஒப்புக் கொள்ளாதபோது, வருந்திப் ப்ரார்த்தித்த அந்தணனுக்கு, இவர்களை

வெல்லும் உபாயம் கனவில் அருளியிருக்கிறார். தென்திருப்பேரை நாராயண தீக்ஷதர் (குழைக்காதர் பாமலை பாடியவர்) நம்மாழ்வாரிடம் பக்திபூண்டு தினசரி காலையில் ஊரிலிருந்து வந்து சேவித்துப் பிரசாதம் பெருமல் ஊர் போவதில்லை. அர்ச்சகர்களுடைய அபிமானம் பெற்று கொஞ்சம் தாமதமானாலும் தனக்காகப் பொருத்திருக்கச் செய்து சேவித்து பிரசாதம் பெற்றுப்போவதும் வழக்கம். அவ்விதம் ஒருநாள் அர்ச்சகர் சந்நிதியின் வெளியில் யாருடனே பேசிக்கொண்டிருந்தவரிடம் திடீரென நாராயண தீக்ஷதர் சேவிக்க போகிறார், சேவை செய்து வைத்து வருகிறேன்என்று, உள்ளேபோய் பார்க்கவும் தீக்ஷதர் எங்கும் இல்லை. மிக்க ஆச்சரியத்துடன் திரும்பி பேசிக் கொண்டிருந்தவரிடம் வரவும், மற்றொருவர் வந்து நாராயண தீக்ஷதர் பரமபதபிராப்தியானதாக தெரிவித்தார். எல்லோரும் இவருடைய பக்தியைப் பாராட்டி, அர்ச்சகர் பார்க்க உள்ளே சென்றவர் காணுமல் வந்ததும், தென் திருப்பேரையில் அவர் பரமபதித்ததும் நினைத்து புளங்காகிதரராய் நம்மாழ்வாருடைய பரமகிருபையை வியந்தார்கள். இவ்விதமாக பக்தர்களும் பண்டிதர்களும் போற்றும் வைபவாதியங்களில் நம்மாழ்வார் திருநாமங்கள்பாடி ஈடுபட்டுவரும் சந்நதிகைங்கர்யபரராகிய திருக்குருகூர் அலங்காரமையங்காருக்கும் அன்னவாகனத்துடன், தன் போதம் இல்லாது ஸ்ரீபாதங்தாங்குவோரால் எழுந்தருளச்செய்து அவர் அந்திமத்தில் சேவைசாதித்ததை இன்றும் நம்மவர்கள் யாவரும் வியந்து கூறுவதுண்டு. இத் தாலாட்டு பாடிய உபயகவி அப்பா என்பார். ஸ்ரீவானமாமலை மடம் பட்டம் 6வது விஞ்சைமூர்ஸ்வாமி என்ற எம்பெருமானுர் ஸ்வாமி திருவடி சம்பந்தியாவார். இந்த ஸ்வாமி சுமார் 54 வருடகாலம் ஸிம்ஹாஸனத்தை அலங்கரித்துள்ளார். காலம் 780 தை முதல் 834 கார்த்திகை கொல்லம் ஆண்டு என அடியேன் தகப்பனுர் தக்க ஆதாரங்களுடன் குறிப்பிட்டவை. ஆசார்யாநுக்ரகத்தாலும் ஊர்ப் பெரியோர்களாலும் சந்நதி அநுஷ்டானங்களில் ஒன்ருக நம்மாழ்வார் மார்கழித்திருவிழாக் கண்டருளும்போது திருச்செவி சாத்தியருளும்படி ஏற்படுத்தப்பட்டு இன்றும் நடந்து வருகிறது.

இதையும் இதுபோன்ற நம்மாழ்வார் விஷயமான சிற்சில பிரபந்தங்களையும் வெளியிட்டுவரும் பாக்கியம் அடியேனுக்கும், தாலாட்டின் ஆசாரியர் போன்று ஸ்ரீ வானமாமலை மடத்துத் திருவடிசம்பந்தமும், நம்மாழ்வாருக்கு பரம்பரையாக ஸ்தலத்தார் கைங்கர்யமும், சந்நதியில் எம்பெருமானுர்தாஸர் என்ற அருளிப்பாட்டின் விசேஷமும், குலப்பெரியோர்கள் செய்த பாக்கியமும், கல்விப் பிரான் ஆகிய நம்மாழ்வாரது பரிபூர்ணக்கிருபையுமேயாகும். எல்லோரும் பாலர்ஸ்த்ரீகள் கவியில் அனுபவம் குறைந்தவர், இவர்களுக்காகவே பெரியோர்கள் முறையை அநுசரியாது சந்திகள் பிரித்து வெளியிடத் துணிந்தது. பெரியோர்கள் அபசாரம் இருந்தாலுங்கூட, நான் ஆசைகொண்ட வண்ணம் சர்வசாதாரணமானவர்களும் இதைக் கற்றறிந்து உரிய பலன் பெறுவது காண்பதே பெரும் பேருகுமென்று மிகவும் திருப்தி உறுகிறேன். பெரியோர்கள் க்ஷமித்தருளி பிழைகளைத் திருத்தி இதுபோன்ற கைங்கர்யத்தில் ஊக்கித்தந்தநுக்ரகிப்பாராக. என்றும் திருமாற்கேயாளாவேன் எம்பெருமான் என்றும் எனக்கே பிரான் ஆவான் என்றும் பிறவாத பேராளன் பேராயிரமும் மறவாது வாழ்த்துக என்வாய்.

திருஞானமுத்திரைப் பிரசராலயம் ஆழ்வார்திருநகரி — பெரியன் வெ. நா. ஸ்ரீவாநிஸன்

15—5—'67. — பதிப்பாசிரியன்



ஸ்ரீ ராமஜயம் திருஞாந முத்திரை துணை

சுவாமி நம்மாழ்வார் தாலாட்டு

காப்பு

தென்குருகை மாறன் திருவவதா ரச்சரிதை
நன்குருகித் தாலாட்டில் நாட்டவே—என்குருவாஞ்
செல்வச் சடகோபர் தேசிகன்பொற் சீர்பாதங்
கல்விப் பிரான் சரணங் காப்பு.
வச்சிரமெய்க் கூன்செழியன் மைந்தன் திருவழுதி
பச்சைஅறந் தாங்கிசக்ர பாணியார்—அச்சுதரே
சீரியலுஞ் சேந்தருடன் செங்கண்ணர் போர்க்கழியார்
காரிகுலச் சேய்மாறன் காப்பு.

நூல்

சீர்பூத்த நீண்மதிலுஞ் செம்பொன்செய் கோபுரமுங் 1
கார்பூத்த மாளிகையுங் கற்பகக்கா வுஞ்செறிந்த

திருவண் பரிசாரத் தேவே சணேயே
மருவஅர விந்தத்தில் வாழ்திரு வாழ்மார்பன்

கற்றெடுத்த கல்விக் கடலான் அருந்தவத்தால்
பெற்றெடுத்த பெண்கள் பெருமாள்உடையநங்கை

பருவங் குறித்துநந்தம் பாக்கியத்தால் தோன்றுந்
திருவின்வடி வுக்கேற்ற செல்விமண வாளன்

எவனும்எனப்புவன ம்எல்லாம் குறித்தெடுத்து 5
நவனுக ரீகன்இவன் ஆகும்என நண்ணி

சித்திரை மாதத்தில் திருவோண நந்நாளில்
உத்தம யோகத்தில் நல்லவோரை முகிழ்த்தத்தில்

திருவழுதி நாடுமுற்றுஞ் செங்கோல் செலுத்தும்
திருவழுதி நன்மரபில் செல்வக் குமாரன்

காரியார் செங்கமலக் கைபிடித்துஇம் மாதுனக்கு
பாரியாம் என்றே பரிவாய் அளித்தருளி

கோசலையும் பார்த்திபர்கள் கோமான் தசரதனும்
நேசமுடன் வாழ்ந்ததுபோல் நீடூழி வாழுமென

வாழ்த்தியபின் வேதியரும் மாதவத்தோ ரும்வாழ்த்த
சூழ்த்ததிசை யோர்வாழ்த்த சொற்பா வலர்வாழ்த்த

நந்தாத தெய்வ நகரை அலங்கரித்து
வந்தார்கள் எல்லாம் வழியெதிரே வந்தேத்த

மாடத் திருக்குருகூர் மாநகரில் எண்திசையோர்
நாடச் சிறந்துநெடு நாள்அரசு செய்ததற்பின்

கங்கையார் நன்மரபில் காரியார் கற்புடைய
நங்கையார் செய்ய நளின முகநோக்கி

''மானே! விலையில்லா மாணிக்க மேதெவிட்டாத்
தேனே ஒருவார்த்தை செப்புவது கேள்என்றார்

நாடும் நகரமும் நன்மணியும் நல்வளமுந்
தேடும் பொருளுந் திரமாம் எனஇருந்தோம்

குதலைமொழிக் கிண்கிணிக்கால் கோகனகச் செவ்வாய்
மதலையரை இல்லாத வாழ்வும்ஒரு வாழ்வாமோ

புக்கடிசில் உண்டு புறம்புல்கிக் கூத்தாடும்
மக்கள்முகம் காணாத வாழ்வும்ஒரு வாழ்வாமோ

ஐந்தடக்கி வேண்டும்அறங்கோடி செய்தாலும்
மைந்தரைப்பெற்று உய்யாத வாழ்வும்ஒரு வாழ்வாமோ

மிகப்பேறு அளித்து விரசை நீராட்டு
மகப்பேறு அடையாத வாழ்வும்ஒரு வாழ்வாமோ

இத்தனைகா லங்களும்ஈது எண்ணினோம் இல்லையென
உத்தமனும் உத்தமியும் உள்ளமிக வேவாடி

ஈடேற்றி ஜன்மத்து இடரேற்றி அயந்தாம
வீடேற்றி வீறளிக்கும் மெய்ப்புதல்வன் வேண்டுமென

சிந்தித்து வாவித் திருநகரி மாமாலை
வந்தித்து இறைஞ்ச வனையாழி எம்பெருமான்

ஆகாச வாணிவடி வாகிக் குறுங்குடியில்
ஏகா முனங்குழவி யீவோம் எனப்பகர

கேட்டபொழுது உள்ளக் கிலேசம்அற நீத்துமன
வாட்டமொழித்து அச்சுதனை வாயார வாழ்த்துதற்கே

தென்குறுங்கை மாநகரஞ் சேர்ந்துதெரி சித்துடலம்
நன்குருகிப் பத்திபண்ண நம்பிகன வில்தோன்றி

எத்திரசம் பத்தும்உமக்கு ஈட்டும் சதுர்வேதன்
புத்திரசம் பத்தைப் பொறித்தான்இலெகொலென

அச்சுதா னந்தா ஹரிகேச வாகண்ணு
மச்சரூ பாஅனந்தா வாமனு மாதவனே

ஏழு தலைமுறையாய் யாங்கள்தொண்டர் ஆகிநிற்க
வாழும்அடியோங்களுக்கு மக்கட்பேறு இல்லையென்ருல்

ஊழ்வினையோ தெய்வம் உனதருளும் பொய்யாமோ
வாழ்வினையே நல்கும் மகவளிக்கல் ஆகாதோ

முன்செய்த மாதவத்தை முற்றும் முடித்திலமோ
பின்செய்த பேறும் பெறும்பேருய்ப் பெற்றிலமோ

கற்ருவுங் கன்றுங் கதறப் பிரித்தோமோ
பெற்ருரைப் பார்த்துப் பெருமூச் செறிந்தோமோ

பேதலித்து முற்பிறப்பில் பிள்ளைப்பால் வார்த்திலமோ
காதலித்து மைந்தர்உண்ணும் கையைப் பிடித்தோமோ

கற்புடைய மின்னுர் கருவை அழித்தோமோ
பொற்புடைய பிள்ளைகளைப் போற்றி எடுத்திலமோ

நல்வினையே துஞ்செய்யா நாங்கள் ஒழியாத
வல்வினையோம் ஐயோ மலடாய்ப் பிறந்தோமோ

செங்கோலை விட்டுக் கொடுங்கோல் செலுத்தினமோ
வெங்கோபம் நீத்தோர்க்கு வேதனைகள் செய்தோமோ

ஆறில்ஒன்று கொள்ளாது அவனி புறந்தோமோ
ஊறில் அன்பர் செய்த உதவி மறந்தோமோ

என்று வழக்காக உரைத்தேங்கிப் பரதவித்து
நின்று புலம்பினர்பால் நேசத்தால் உள்ளிரங்கி

ஆதிநம்பி கண்ணுக்கு அணித்தாய் எழுந்தருளி
நீதிமைந்தன் நாம்உமக்கு நீர்ஏகு வீர்என்று

கண்ணீர் துடைத்துக் கரத்தினுல் தைவந்து
பெண்ணீர் மையினுல்நீர் பேதலியாது ஏகும்என

வெள்ளைஆ ழித்துயிலும் வேதாந்த மூர்த்தியையே
பிள்ளையா கப்படைக்கப் பெற்ருேம் எனமகிழ்ந்து

கண்டா தரிக்கவிண்ணுேர் காதலிக்கப் பூதலத்தோர்
கொண்டாட மீண்டுங் குருகா புரிக்கேகி

தென்னர் புகழச் செகத்தோர் பணிகேட்ப
மன்னர் வணங்க மறையோர் புடைசூழ

சீர்புகழ வாழ்ந்தநாள் தேவி திருவயிற்றில்
பார்புகழக் கற்பக்குறி பையக்காண் பித்ததனுல்

அங்கமெங்கும் வெண்பவளம்ஆக வெளுவெளுத்து
கொங்கைவட்டம் இட்டுக் குறுங்கண் கறுப்பேறி

மேனிப் பசுநரம்பு மேல்தோன்றி வேற்றுமுகந்
தான்இத் தனக்கு ஒருசாட்சிக் குறிகாட்டி

பண்டிபெறுத்து ஓர்அழகு பாலித்து வேர்வைசிந்தி
உண்டிவெறுத்து உண்ணுது உறக்கம் பெரிதாகி

ஆக்கைவிட்டு மெய்சோர்ந்து அயாவருத்தங் கொண்டுநுனி
நாக்குலர்ந்து தாகித்து நாடா ததுநாடி

சாலப் புளித்ததுவுந் தண்சுவர்மேல் பூசுமண்ணும்
பாலொத்த நீரும் பலகாலமும் அருந்தி

திங்களீ ரைந்துந் திருவயிறு வாய்த்ததற்பின்
அங்கங் குழைந்துகுழைந்து ஆகுலமாய் நொந்துபட்டு

வெண்சங் கினமுழங்க வேதியர்பல் லாண்டிசைப்ப
பண்சங்கைப் பட்டமொழிப் பைந்தொடியார் வாழ்த்தெடுப்ப

தேவர்அனைவோருந் தேமலர்வா ரிச்சொரிய
மூவர் கருணை முகத்தா மரைமலர

அரம்பையர்கள் கூத்தாட அணிமுரசந் தான்ஆர்ப்ப
நிரந்தரமுங் கொண்டல் நிதிமாரி பெய்ய

பூபாரம் தீரப் புலவோர் இசைபாட
ஸ்ரீபாஷ்யம் உரைத்தோன் சிந்தைசெயுந் தேவாகி

நாட்டுங் கலியாதி நாற்பத்து மூன்றுநாள்
வேட்டதிரு வைகாசி வெள்ளிநாள் பூர்ணையில்

திருவிசா கத்துஉதையஞ் செய்யமட மானுர்
மருவிஜயன் அய்யனென்றே வாழ்த்திக் குரவையிட்டு

பொற்கலத்தில் ஏந்திப் புதுமஞ்சள் நீராட்டி
நற்கலையால் மெய்துடைத்து நாபித் தலம்பார்த்து

சற்கரையுந் தேனும்ஒன்றுய்ச் சாரித்துச் சங்கில்இட்டு
பொற்கொடியார் சேனை புகட்டிஉச்சிக்கு எண்ணெய் இட்டு
நெற்றி பிடித்துஅமர்த்தி நீண்டபசுங் கைமுறுக்கி
முற்றுந் தடவி முளந்தாள் இணைநிமிர்த்து

சோணை உருவிச் சுடர்மூக்கந் தண்டுஉருவிக்
காண இனியக் கனிவாய் வசம்பூட்டி

புத்திரனைக் கைக்கொடுத்த போதுவந்து காரியார்
முத்தமிட்டு மூரல் முகத்தா மரைநோக்கி

பூதானம் கோதானம் பூரிதா னம்வித்தின்
மாதானம் பூசுரர்க்கு மாசுரர்க்குந் தான்வழங்கி

நன்னிலத்தில் பன்னிரண்டா நாள் ஆதி நாதர்திருச்
சன்னிதியில் தொட்டிலிலே தக்கோனைக் கொண்டுவந்து

வீறன் கலைஞ்ஞான மேதாவி யானமகிழ்
மாறன்என நாமம் வழுவாது சாத்தியபின்

ஆனைக் கழுத்தில் அலங்கரித்த பூந்தேரில்
சேனைத் தலைவருடன் செல்வனைக்கொண்டு ஊர்க்கேகி

காதலாய்க் காண்போர்கள் கண்ணேறு வாராமல்
ஆதரவாய்க் கற்பூர ஆலத்தி யுங்காட்டி

ஒப்பமிட்ட பொன்தகட்டில் உள்ளும் புறத்தும்ஒன்ருய்
செப்பமிட்ட வச்சிரத்தால் செய்த திருத்தொட்டில்

வயிரக்கால் நாட்டி வயிரவயி டூரியத்தால்
செயிர்அறுத்து விட்டம்எனச் சேர்த்ததனின் ஊடே

காண்டகுசோ பைச்சுடரோன் கற்றைக் கதிர்முழுதும்
பூண்டதென நீண்டதங்கப் பொற்சங் கிலிநாற்றி

செஞ்சூ ரியப்படத்தில் சேர்த்தசிறு மெத்தையின்மேல்
பஞ்சூடு நீலப் படாத்தின் தழுவணையுங்

கைக்கொட்டை யுஞ்சிவந்த கால்க்கொட்டை யுந்திருத்தி
மெய்க்குஏற்க ஏழடுக்கு வெண்பட்டு மேல்விரித்து

சூற்கட்டு மேகத்தில் தோன்றும்உடு ராசிமுத்தின்
மேற்கட்டு கட்டி விடுபூ மழைசிதறி

மருக்கொழுந்து பிச்சிஇரு வாக்ஷிமுல்லை மல்லிகைப்பூ
தருக்கொழுந்து கோகனகஞ் சாதிவேர் சண்பகப்பூ

சூழவிதா னித்துஅதனுள் சோதிப் பிழம்பொளிபோல்
வாழப் பரிவாய் மலர்க்கண் வளரவிட்டு

பாந்தள் அரசன் பணுமகுடப் பார்காக்குஞ்
சேந்தர்புகழ் விளக்குந் தெய்வத் தனிச்சுடரோ

அங்கண்ணர் யார்க்கும் அருட்கொழும் பாய்நீதிச்
செங்கண்ணர் தோன்ற செழித்தவழித் தோன்றலோ

கச்சுலவு கோலக் கனதனத்தார் சீராட்டி,
அச்சுதற்கும அச்சுத ரென்று ஆதரிக்குங் கோள்அரியோ

வங்கர் கலிங்கர் மகதர் திரையீட்டும்
எங்கள் சக்ர பாணியார் எண்ணரிய போர்ஏரே

கார்க்கழியா வேழக் கடல்தூண்டி மாறுபட்டோர்
போர்க்கழியார் தோளாண்மை பூத்தகுணக் குன்றமோ

மறந்தாங் கியசமைய வாதியரை வென்றே
அறந்தாங்கி யார்பேர் அறந்தாங்கும் அற்புதமோ

ஆழ்வார்கள் ஒன்பதின்மர் ஆரியர்முக் கோல்தரித்து
வாழ்வார்கள் தொண்டர்தொண்டர் வாழப் பிறந்தானே

தண்தமிழும் வேதாந்த சாரப் பெரும்பொருளும்
மண்டலமும் விண்டலமும் வாழப் பிறந்தானே

திருப்பதிநூற் றெட்டுஞ் செழுந்துளபத் தாமம்
மருப்பதிநூற் றெண்மர்களும் வாழப் பிறந்தானே

திருநாளும் மாதத் திருநாளும் சான்றோர்
வருநாளும் என்னுளும் வாழப் பிறந்தானே

தழைவளமுஞ் சேணில் தருவளமும் நீங்கா
மழைவளமும் எவ்வளமும் வாழப் பிறந்தானே

ஒன்பதின்மர் ஆகி உரைத்ததிரு வாய்மொழியுந்
தன்பதியும் நாளுந் தழைக்கப் பிறந்தானே

அண்டமாய் அண்டத் தடுக்காய் அடுக்கழியாப்
பிண்டமாய் ஒன்றும் பெருந்தகையைச் சொன்னார்

அனலும் விசும்பும்அகலிடமும் காற்றும்
புனலும் பொருவும் புராதனனைச் சொன்னார்

ஆலாகி ஆலின் அடையாய் அடைக்கிடந்த
மாலா கியஎகின வாகனனைச் சொன்னார்

பத்திக்கு வித்தாய்ப் பணித்தடங்காப் பண்ணவனை
முத்திக்கு வித்தாய் முளைத்தவனைச் சொன்னார்

நல்குரவுஞ் செல்வமும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்புமாம் வித்தகனைச் சொன்னார்

கொங்கார் பொதும்பர்தொறும் கோகனகப் போதுதொறும்
செங்கால் அனம்சேர் திருவழுதி நாடனே

கால்பாயுஞ் சேற்றுக் கருமேதி பாயவரிச்
சேல்பாயும் வாவித் திருவழுதி நாடனே

முன்னம் பழுத்தபலா முட்புறத்தின் காய்சிதறத்
தென்னம் பழம்வீழ் திருவழுதி நாடனே

மஞ்சாலி முத்தோ வயல்முத்தோ காந்திஎனச்
செஞ்சாலி சூழுந் திருவழுதி நாடனே

முசுவரி வண்டாட முல்லைமுகை விண்டாடுந்
தேசுகுடி கொண்ட திருவழுதி நாடனே

இருகூர் விழியார் இசைபோலக் கூகை
குருகூர்என் றேதுங் குருகைப் பெருமானே

நாலா கலைப்பொருளும் நால்வேத மும்பயிலக்
கோலா கலமாம் குருகைப் பெருமானே

வெஞ்சரத்தால் புண்படுத்தும் வில்வேட னும்கொடிய
குஞ்சரமும் போற்றும் குருகைப் பெருமானே

நாடிவலஞ் சூழ்ந்தசங்க ராசனும் சங்கமுனி
கோடிவலம் சூழும் குருகைப் பெருமானே

கருவூரன் ஞாளியால் காசினியில் வைகுந்தம்
குருகூர்என்று ஓதுங் குருகைப் பெருமானே
சுழிக்குந் திரைநீர்ச் சுழிதோறும் முத்தம்
கொழிக்கும் பொருனைக் குருகைப் பெருமானே

என்றுதா லாட்டும் இசைக்குருகி நங்கை எந்தன்
கன்றுமுலை உண்ணுது காலங் கழிக்குமோ

ஆவா எனப்பதறி அள்ளி எடுத்தணைத்து
கோவா மணியைக் குரங்கின் இடைக்கிடத்தி

ஏந்திப் பிடித்துஇருத்தி ஏலக் குழல்முடித்து
பூந்தெரிய லும்சூட்டிப் பொற்கொண் டையும்சாத்தி
பொன்னின் அரசிலைசூழ் பொறப்பட் டமும்சாத்தி
மின்னின்நக்கு இழைமான வீரபட் டமும்சாத்தி

திருவும் பிறையும் திகழ்ந்தசுட்டி மீதுஅணிந்து
மருவும் கொடிநெடிய வள்ளைக் குழைபெருக்கிச்
சீலைக் குதம்பையிட்டுச் சீராக வெண்ணெய் இட்டு
காலைக்கதிரில் கனத்த குணுக்கும் இட்டு

வடிந்த குழைக்காதில் மகரக் குழைசாத்தி
படிந்தரத்னக் கொப்பணிந்து பச்சைமணி வாளியிட்டு

மூக்குப்பூ இட்டதின்மேல் மூக்குத்தி யுஞ்சாத்தி
நோக்குந் திருக்கழுத்தில் நோக்கரிய காறையிட்டு

தாலியும் ஐம்புடையுந் தங்கத்தி னல்அணிந்து
மாலிகையும்வெண்தரள மாலிகையுங் கோர்த்து அணிந்து

முன்கை முதாரியிட்டு முத்தின் கடகம்இட்டு
நன்குபெறு தோள்வளையும் நல்பவள மும்புனைந்து

வெள்ளிவளை தந்தவளை வேகடஞ்செய் செம்பொன்வளை
ஒள்ளியதா கக்கரத்துக்கு ஒப்பாய்த் தெரிந்துஅணிந்து

அரைவடமும் கிண்கிணியும் அமச்சும் அரைநாணும்
நிரைமணியுங் கட்டுவடம் நீங்கா அரைக்குஅணிந்து

தண்டைச் சிலம்பு சதங்கைசிறு தாள்க்கு அணிந்து
கெண்டைவிழி மைஎழுதிக் கீறுதிரு நாமம்இட்டு

கட்டாய திருநுதலில் கத்தூரிக் காப்பெழுதி
பட்டாடை சாத்திப் பனிநீர் அயினிசுற்றி

அப்பாஎன் ஆருயிரே ஆருயிர்க்கும் ஆருயிரே
ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒளிவிளக்கே
கண்ணுக்கு இனியானே கட்டழகில் மிக்கானே
பண்ணுக்கு இனியானே பாகுஒழுகுஞ் சற்கரையே

தேனின் மதுரமே செங்கருப்பந் தீம்பாலே
மானேர் விழியார் மனம்உறுக்கும் குஞ்சரமே

செல்வக் குழல்வணனே தேமாம் பழச்சுவையே
கல்விக் களஞ்சியமே காமருசீர் ஓவியமே

கிட்டாத் திரவியமே கேடில்லா மெய்உணர்வே
அட்டாங்க யோகத்துக்கு ஆணிப் பசும்பொன்னே

பேறுஅளிக்கும் வித்தகனே பிள்ளைமா ணிக்கமே
கூறுஅரிய நித்திலமே கோமே தகத்தெளிவே

நந்தாத கோமளமே நாடறிய சொல்பொருளே
சிந்தா மணிவடிவே தித்திக்குந் தெள்அமுதே

அல்லல் ஒழிக்கும் அருமைப் பெருமானே
நல்லதிரு மகனே நாவீறு உடையானே

திருவிசா கத்தில்வந்த தெய்வத் தனிச்சுடரே
சுருதிஆ ராயுந் தொடரிமலை காவலனே

குருகைப் பெருமானே குமரித் துறையானே
பொருனைத் துறையானே பொதியமலை காவலனே

செம்மலே நாவில் தெவிட்டாத முக்கனியே
அம்மம்உண்டு கண்துயிலா அற்புதனே என்றுஎன்றே

ஒக்கலைமேல் கொண்டுமுலை யூட்ட நினைத்து ஊறுபால்
தக்கபடி முன்னே தரையில் சிறிதுஊற்றி

கோகனகச் செவ்வாயில் கொம்மைமுலை யைப்பிடித்து
மாகனகக் கையால் மடித்துஇருத்தும் போழ்தினிலே

மைந்தன் கடைவாய் வழியே வழிந்தொழுக
நைந்து பயப்பட்டு மடநல்லார் தமைநோக்கி

எங்கள் குடிக்கும் இறையோன் பெருங்குடிக்கும்
உங்கள் குடிக்கும் ஒருமகவாய்த் தோன்றினான்

பால்உண்ண வில்லை பசித்தழவோ தானும்இல்லை
மேல்உண்பான்என்றால் விழியும் திறக்கவில்லை

உச்சி குளியவில்லை உள்ளங்கால் வேர்க்கவில்லை
அச்சங்கை உண்டாம் அரிவையர்இங்கு எய்தவில்லை

இயக்கம்ஒன்றும் காணேன் இளைத்துஇளைத்து மூசி
மயக்கம் பெரிதாய் மருண்டிடவும் தானும்இல்லை

கலைஉண்ணாத் திங்கள்நுதல் கன்னியரே தாயார்
முலைஉண்ணாப் பிள்ளைகளை மூதுலகில் கண்டதுண்டோ

பெண்கொடியீர் அம்மம்உண்ணப் பேதலித்துப் பண்டிஎக்கிக்
கண்பிசைந்து வாய்காட்டாக் காதலரைக் கண்டதுண்டோ

பெண்ணீர் நீங்கள்பெற்ற பிள்ளைகளில் சேனைமுதல்
உண்ணாது பூரிக்கும் உத்தமரைக் கண்டதுண்டோ

கைகால் அசையாமல் கண்ணும் விழியாமல்
மெய்வாய் திறவாத வித்தகரைக் கண்டதுண்டோ

இருத்தினால் எட்டுநாள் ஆகிலும் அவ்வண்ணம்
இருக்குங் குழந்தைகளை இவ்வுலகில் கண்டதுண்டோ

எடுத்துக் கிடத்தினால் யான்கிடத்தும் அவ்வண்ணம்
படுத்திருக்கும் பாலகரைப் பாருலகில் கண்டதுண்டோ

பண்பினுடன் மைஎழுதப் பையத் திறந்துபின்னைக்
கண்திறவாப் பாலகரைக் காசினியில் கண்டதுண்டோ

மறுகிஅன்னை நின்று மயங்கினால் சற்றே
குறுமூரல் செய்யுங் குழவியையுங் கண்டதுண்டோ

ஈதேது மாயமோ எண்ணமுடி யாதுஎன்றார்
மாதே குழந்தையைநாம் மால்முனம்வைப் போம்என்றார்

நன்றுரைத்தீர் ஆதி நாரா யணன்செயலே
என்றுரைத்துத் தன்கணவற்கு இவ் வண்ணஞ் சொன்னதற்பின்

தண்சுடரோன் என்னவன்னத் தந்தச் சிவிகையின்மேல்
எண்சுடரோன் என்ன எழுந்தருளப் பண்ணுவித்து

பல்லியமுஞ் சங்கினமும் பம்புமுகில் போல்முழங்க
மெல்லியலார் ஆலவட்டம் வெண்சா மரையிரட்ட

பூச்சக்ர வாளப் புவியோர் புடை சூழ
மாச்சக்ர வாளவன்ன வட்டக் குடைநிழற்ற

சங்கீத மேளம் சதிமுறையா கப்பயில
நங்கீதங் கேளுமென நாரதர்யாழ் வாசிப்ப

கயரதவா சிப்படைமல் காலாள் படைமிடைய
செயசெயஎன்று ஓத செகவேந்தர் நின்றுஇறைஞ்ச

நீலமலை போல்பொலிந்து நின்றபெரு மான்திருமுன்
கோலமலை போல்பொலிந்து கோதிலாப் பாலகனை

தெண்டனிட விட்ட திருத்தாய் மனங்குளிர
கண்டுகண்டு காரியார் கண்கள் களிகூர

சுற்றத்தார் பின்தொடரத் தொல்புவியோர் பூரிக்க
பற்றற்றார் கொண்டாடப் பாகவதர் ஏத்தெடுப்ப

காதசையத் தோள்அசையக் கையசையத் தாளசையத்
தாதசையப் பூவசையத் தாரசைய மெய்யசைய

மேரு விமானம்எனும் மேவிஉறை கோயில்சுற்றிப்
பேர்உகத்தின் சீர்மை பெருகும் துவாபரத்துள்

ஒருகந்த ஆனிமூ லத்திலே உற்பவித்த
தாருஉர கப்புளிக்கீழ்த் தானே தவழ்ந்தோடித்

தெற்கே முகநோக்கி செய்யபது மாசனத்தில்
விற்கேள் நுதலார் விரகால் நலங்கடந்த

போதத் தளவே புதிது புதிதாக
சீதப் புனிதத் திருவுள்ளம் வேர்ஊன்றி


கண்ணன் அடிக்கமலம் காமித்து மெஞ்ஞானக்
கண்ணன் எனஉண்மைக் கரமுத் திசைதரித்து

மண்ணவரும் விண்ணவரும் வாழ்த்தெடுப்ப வேதாந்தப்
பண்ணமுதம் ஊறப் பரஞ்சோதி யாய்இருந்து

நாசி நுனிநோக்கி நாட்டம் பிறழாமல்
மூசியெதிர் ஓடுபெரு மூச்சும்அகத் தூடுஅடக்கி

மார்பு நிமிர்ந்துதிரு மந்திரமே தாரகமாய்
ஆர்வமுடன் கொப்பூழில் அம்புயமாம் அக்கரத்தை

வைத்துயோ கத்திருந்த வாறுதெரி சித்துலகோர்
மொய்த்து வழிப்பட்ட முறைநோக்கி ஈராறு



திருக்குருகூர் என்ற ஆழ்வார்திருநகரி ஸ்வாமி நம்மாழ்வார்

திங்கள்மட்டாய் ஆவிபெற்ற சித்திரம்போ லச்சிறந்த
மங்கலரு பத்தின்எழில் வாய்த்த சிறுபாலன்

தவழ்ந்ததொன்றும் போதும்எனத் தங்களிலே சொல்லி
உவந்துஉவந்து பார்த்துப்பார்த்து உள்ளம் களிப்பாகி

திருப்புளிக்கீழ் வீற்றிருந்த சேயை எடுத்தளவில்
பொருப்பைஅசைத் தாலும்இந்தப் புத்ரன்அசை யான்என்றே

நங்கைமட மாதுஉரைக்க நங்காரி யார்பரிவாய்
அங்கைகொடு சீராய் அணைத்துஎடுத்துப் பார்த்ததற்பின்

மானார் எடுத்தார் மகவுடையோர் தாம்எடுத்தார்
ஆனாத செங்கோல் அரசர்எல்லாம் வந்துஎடுத்தார்

நானா விதத்தாலும் நம்மால் அசைபடான்
ஆனாலும் இந்தமைந்தன் ஆனைக்கும் தான்அசையான்

என்றுஎவ ருங்கூர இரங்கித் தாங்கியவர்
மன்றல்மலர்க் கூந்தல் வடிவுடைய நங்கைமின்னாள்

கைசோர உள்ளங் கரையக்கண் ணீர்சோர
மெய்சோரக் கால்சோர விம்மல் பொருமலாய்

நோய்விட்டுப் பின்னும்அந்த நோய்பிடித் தால்போல
வாய்விட்டு அழுதுஅரற்ற மாட்டாமல் உள்ளடக்கி

அன்றுபோல் போட்ட அணை ஆடை யில்கிடவாது
இன்றுதவழ்ந்து ஓடவைத்த எம்பெருமா னேஇரங்காய்

சாத்திரர்க்குங் காணாத தாமோத ராஇரங்காய்
வீற்றிருக்கப் பண்ணுவித்த மெய்ப்பரந்தா மாஇரங்காய்

அறமே இரங்காய் அருள்மூர்த்தி யேஇரங்காய்
மறமே இரங்காய் வனதேவ தாய்இரங்காய்

விண்ணே இரங்காய் விதிவலியே சற்றுஇரங்காய்
மண்ணே இரங்காய் மதியாத வாஇரங்காய்

ஆர்இரங்க வல்லார்என்று ஆகுலிக்கும் அக்காலம்
பாரிடங்கர் ஓட்டப் படித்தமந்த்ர வாதியரும்

பண்டிதரும் தங்கள்தங்கள் பார்வைக்கும் மூலிகைக்கும்
தண்டுதல்இல் லாதுமனஞ் சலித்துத் தடுமாறி

செய்கைதனிற் பேதித்துச் சிந்தா குலித்துலைந்து
கைதவம்என் பார்சிலவர் காரணம்என் பார்சிலவர்

சேனைமுதல் வன்என்பார், செய்தவத்தோன் காண்என்பார்
ஆனை இடரொழித்த அச்சுதா னந்தன்என்பார்

அவ்வவர்கள் தங்கள்தங்கட்கு ஆனபடி, சொல்வதெல்லாம்
கௌவைபெரி தாய்க்கேட்டுக் கான்முளையை விட்டகலார்

இன்னம் பருணிதர்வந்து எய்திநந்தம் பாக்கியத்தால்
அன்னம்உண்ண வாய்பேச ஆதரிக்கப் பண்ணுவித்தால்

ஆகாதோ என்றே அனேவோரும் அங்குவிட்டுப்
போகாது காத்திருந்து புத்திரனுக்கு அன்னேமார்

எவ்வண்ணம் சீராட்டி எவ்வண்ணம் பாராட்டி
எவ்வண்ணம் போற்றுவார் அவ்வண்ணஞ் செய்துவந்தார்

ஆண்டுதொறும் ஆண்டுதொறும் அங்கம் அவையவங்கள்
நீண்டு தசைந்து நிரந்தரமும் பூரித்துப்

பரவசம் ஆகிப் பாரபத்தி யேபண்ணி
நிரவதிக ஞான நியமநிலே உண்டாகி

பேர்ஓகை அன்பால் பிதிர்ஓடக் கொங்கைவிம்மி
வாரோடு இகலும் மருக்கமுந்தான் கண்டுகண்டு

மாரு வழுதிகுல வாழ்வே மலக்குநா
வீரு புவிவேந்தர் வேந்தே குருகூரா

பொற்காரி யார்உனக்குப் பொற்கழங்கும் பொற்பந்தும்
பொற்காம தேனுவும் பொற்பூவும் வரவிட்டார்

தென்னர் சிறுதேருஞ் சிறுபறையுந் தொட்டிலும்செம்
பொன்னின்அம் மானேயும் புதிதாய் வரவிட்டார்

சப்பாணி கொட்டித் தளர்நடையிட்டு அப்பூச்சி
எப்போது காட்டிஎமக்கு இன்பம் தந்தருள்வாய்

திருமஞ் சனம்ஆட்டிச் சிற்ருடை யுஞ்சாத்தி
மருமஞ் சரிசூட்ட மாதரார் வந்துநின்ருர்

சிற்றில் சிதைத்துஅழிக்கும் சிற்றடியைக் காணஎன்றே
சிற்றில் பலகோலித் தெரிவையர்கள் சூழ்ந்துநின்ருர்

வேலேயிட்ட கண்ணர்உன் மெய்யழகைப் பார்துப்பூ
மாலேயிட்டு நிற்கும் மணக்கோலம் காணவந்தார்

அமரரினும் மாறன் அழகுடையான் என்றே
குமரர்இருந்த மாதர்மடல் கொண்டுஎழுதிப் பார்க்கின்ருர்

உன்கணவ னேமடவீர் உன்னிலும் பெண்மைமிக்காம்
என்கணவ ன்என்றே இகலிமயல் கொண்டுநின்ருர்

இளவரசு தேவரீர் எங்களுக்குஎன்று ஏத்தி
வளவரசர் கப்பம் மலேபோல் குவித்துநின்ருர்

பெருவழுதி நாடாளும் பிள்ளைஇவன் என்றே
திருவபிடே கம்புனையத் தேசிகர்எல் லாம்வந்தார்

ஏதேனும் எண்ணுது இருக்கின் றதும்இயல்போ
நாதா எனவுரைத்து நாட்கழிக்குங் காலத்திலே

பொருந்துஞ் சதுர்வேதப் புனிதர் வடிவாகி
திருந்துந் துவாபரத்தில் சித்திரையில் சித்திரைநாள்

கோளூரில் உற்பவித்துக் குற்றம்அற்ற சிந்தையனுய்
வேள்ஊர் கணையை விலக்கும் பொருட்டாக

கங்கா நதிப்புனலில் கார்கா லமும்படிந்து
வெங்கால் துகள்சருகு வெய்யோன் ஒளிஅருந்தி

பஞ்சாக் கினிநடுவே பலகா லமும்பழகி
அஞ்சா யுதத்தோனை ஆதரிக்கும் அக்காலம்

தென்பால் ஒருகோடிச் செங்கதிரோன் நின்றுதித்து
முன்பாகத் தோன்றும் முறையிறும்பூ தென்றுஉணர்ந்து

பின்னெருவர் காணுது பேதையேன் கண்ணருகு
மன்னுவது ஏதுஎன்றே மலைத்தோம் அறியாமல்

நன்றிசெயும் தண்புனலில் நாம்முழுகும் நம்முகத்தைத்
தென்திசையை நோக்கித் திருப்பிவிட்ட காரணத்தால்

மண்டலத்தில் செய்ததவம் வந்துவெளிப் பட்டதுஎன
கண்ட கதிரோன் கதிரே வழிகாட்ட

வந்தான் பொருனை வடகரையில் வந்தேற
நந்தா ஒளிப்பிழம்பாய் நாள்தோறும் தோற்றிநின்ற

செய்யோனை இன்று தெரிசிக்கப் பெற்றிலமோ
அய்யோ என்றே அளவறுக்க மாட்டாமல்

நிற்கும் பொழுதில்அந்த நேமிச் சுடர்வேந்தன்
அற்குன்றுங் காந்தி அடங்கியதுஇவ் வூரிலென

உள்ளத்தில் எண்ணி உவட்டெறியுஞ் சங்கணிநீர்
வெள்ளத்தில் நீராடி மீண்டஅள வையினில்;

இங்குள்ள அற்புதம் ஏதுஎன்றுவின வும்பொழுதில்
அங்குள்ளார் எங்கள் அரசன் குலக்குமரன்

வாயுந் திறவான் மலர்க்கண் ணிணைநோக்கான்
தாயைமுகம் பாரான் தந்தையையுமோ வாஎன்னுன்

என்றுதவ மப்படித்தான் அன்றுமுதல் இன்றளவும்
ஒன்றும் இருப்பில் ஒழியாது வீற்றிருந்தான்

சேயென்றால் சேயோ செழுமணிதான் கொண்டநோய்
பேயென்றால் பேயும்அன்று பேசஅரி தாம்என்றார்

அன்னாரை நோக்கி அருள்சுரந்த சிந்தையனாய்
நன்னாவ லன்புகும்ஊர் நாதன் மதுரகவி

யான்அறிய வேண்டும்உங்கள் இறையோன்பால் சொல்லும்என
மான பரன்ஒருவன் வந்தான் எனப்பகர

மந்திரிமார் கேட்டு மதித்தெதிர்கொண்டு அங்குஏகி
முந்தி வணங்கி முனிப்பெருமா னேஇந்த

மதலைமொழி பேசினால் வையகம்எல் லாம்உமக்கு
முதல்அரசு நல்கும் முயற்சிஇடு வோம்என்றே

வார்த்தைகேட் டுப்பொறுக்க மாட்டாதார் முன்மகவைப்
பார்த்தவரின் மிக்காய்ப் படித்தவர்போல் தோன்றுதே

ஊசி நுழையாத உரோமச் சடைமுடியான்
பாசிபற்று மேனியினான் பார்க்குந் தொழிலறிய

வல்லவனோ என்றுஇகழ மன்னன்அத னைக்கேட்டு
நல்லவன் அங்குஏக நவிலும் எனவிடுத்தார்

ஒண்டொடியார் பின்னேகும் யோகி முகநோக்கி
அண்டர்குரு வேளங்கள் ஆவிமைந்தன் பேசினால்

யாம்உமக்குத் தொண்டுசெய்வோம் என்றுரைத்த போதுதக்கோன்
கோமுதல்வ ரோடும்போய்க் கோயில் புறமாக

நன்றால் இவன்வார்த்தை நீர்கேட்கப் பண்ணுவிப்பேன்
என்றவருங் கூற எல்லோரும் பின்னடைய

பாகார்ந்த செஞ்சொல் பராங்குச மாமுனிவன்
ஏகாந்த யோகத் திருந்த செயல்நோக்கி

இச்சோதி யோஎன் இதையம் உருக்கியது
முச்சோ தியினும் முழுச்சோதி என்றுஇறைஞ்சி

ஆடியா டிப்பாடி அங்கோடி இங்கோடி
நாடிநா டிப்பார்த்து நங்கைபெறும் பேறோ

வானத் தவர்பேறோ மாநிலத்துள் ளார்பேறோ
ஞானத் தவர்பேறோ நல்நா வலர்பேறோ

என்பேறும் என்பதற்கு ஏதுவும்இப் போதுளவால்
அன்புஏறும் இன்புருகும் ஆதரவு மிக்காகும்

அங்கம் புளகம்எழும் ஆனந்த வாரியெழும்
துங்க முகம்மலருஞ் சுந்தரத்தோள்பூரிக்கும்

சென்றுடுந் தீர்த்தம்எதிர் வந்துஆடப் பெற்றதே
என்றுஆயி ரந்தரமாய் இச்சைப் படிஇயம்பி

பித்தே றினர்போலப் பேதலித்து மெய்மறந்து
கொத்தேறு பூவுங் குழையும் பறித்தெறிந்து

தன்னைப் புகழ்ந்து தனைத்தானே பூசித்துப்
பின்னைத் தெளிந்து பிழைத்தோம் எனப்போற்றி

கரியதிரு மேனிஎங்கே கைநான்கில் இரண்டுஎங்கே
பெரியதிரு உந்திமலர் பெற்ற பிரமன்எங்கே

பாகத்தில் வாழும் பரசுதரித் தோன்எங்கே
ஆகத்தில் வாழும் அலர்மேல் மட்ந்தைஎங்கே

அண்டம்உண்ட செவ்வாய் அரவிந்தப் போதுஇதுவோ
பண்டுஅகிலம் ஏழும் பரந்துஅளந்த தாள்இதுவோ

ஆலந் தளிரில் அடங்கும் வடிவுஇதுவோ
சீலம் பலவும் தெரிந்துஉணரக் கூடுமோ
குன்றே மரமே குளிர்புனலே காமின்எனத்
தன்தாயை நோக்குந் தனிக்கன்று போல்மகிழ்ந்து

நிலைவணங்கி மெய்ஒடுக்கி நீதி நெறியாகத்
தலைவணங்கிக் கையொடுக்கித் தாழ்ந்துமுறை தப்பாமல்

வாய்புதைத்துத் தூசுஒதுக்கி வந்துதனை யாள்க்கொண்ட
சேய்உகக்கு மாறு திருச்செவியில் ஓர்வசனம்

[1]சித்தின் வயிற்றில் சிறிய பொருள்கிடந்தால்
எத்தைத்தின்று எங்கே கிடக்கும்என எங்கோமான்

அத்தைத்தின்று அங்கே கிடக்கும்எனும் அவ்வார்த்தைப்
பத்துத்திக் குங்கேட்கப் பார்த்திபர்கள் ஓலம்இட்டு

புத்திரனைப் பேசுவித்த புண்ணியனே என்றவர்க்குப்
பத்திபத்தி யாகப் பணித்துகிலுஞ் செம்பொன்னும்

மலைபோற் குவித்துமன்னர் மண்டலீ கர்முதலோர்
கலையார்ந்த தண்புழுகு கஸ்தூரி கற்பூரம்

எண்ணெய்மஞ்சள் நீர்களபம் ஏலச் செழும்பனிநீர்
வெண்ணெய்தயிர் பால்நறுநெய் வீதிதோ றும்பெருக்கி

ஆறுஇரண்டு நாட்களி யாட்டுஆடிக் களிகூர்ந்து
வேல்திரண்ட கண்ணாரும் வேந்தர்வேறு உள்ளாரும்

---

[1]சித்தத்தின் வயிற்றில் சிறியதுஉதித்திடிலே
என்றே பல நூல்களிலும் வழக்கிலும் உள

தென்பால் உதையத் தினகரனைக் கண்டோனே
அன்பாக யாங்கள் அளித்த திரவியத்தை

கைக்கொள்ளா தேவெறுத்த காரணத்தைச் சொல்லும்என
மெய்க்கொண்ட மாதவத்தை வேட்ட நமக்கு ஏன் இதுஎன்று

கூறியபின் உங்கள் குலத்தருமம் ஈதுஎன்ருல்
ஆறிய சீற்றத்தாய் அடியோம் குழவிதன்னை

நன்ருகப் பேசுவித்து நாட்டம் திறப்பித்துச்
சென்றுஆச்சி ஊட்டுந் திருமுலைப்பால் உண்ணவைத்து

வாழ்வருள்வீர் என்றுரைத்த மாற்றம் தனைக்குறித்து
தாழ்வுஅகலத் தோற்றுஞ் சடகோபன் எம்பெருமான்

பரமபத நாதன் பரஞ்சோதி மூர்த்தி
பரவாசு தேவன் பரந்தாமத் தண்ணல்

பத்துருவாய் உற்பவித்தும் பாரோர் திருந்தாது
தத்துவத்தை விட்ட தவறு அனைத்துஞ் சிந்தைசெய்து

வேதத் தமிழை விரித்துஉரைக்க வேண்டும்என
போதத்து அரவைப் புளிக்கா வணம்ஆக்கி

அடியேனும் பட்டர்பிரான் ஆழ்வாரும் வெற்றிக்
கொடியாம் கருடன்எனக் கூறும் படியாக்கி

வாரணத்தைப் பொய்கை வனசப் பிரானுக்கித்
தாரணித் தண்டத்தை தமிழ்ப்பூதத் தாராக்கி

பேரா னந்தத்தைப் பேயாழ்வார் ஆக்குவித்து
போர்ஆழி யைமழிசைப் புத்தேளிர் ஆக்குவித்து

நீலக் கடல்அளித்த நேமிச் சுடர்மானுங்
கோலக் கவுத்துவத்தை கொல்லிக்கு இறையாக்கி

ஆர்ந்தவன மாலிகையை அன்பர்தாள் தூளாக்கி
சேர்ந்த மனுவைத் திருப்பாணும் வாராக்கி

கூர்ங்கணையால் ஒன்னர் குடல்பிடுங்கி மாலையிட்ட
சார்ங்கவில்லை மங்கை ததியர்பெரு மான்ஆக்கி

தேசத் தவரில் சிறந்தகற்ப யோகியுமாய்த்
தாசர்க்குந் தாசன் தனக்குத்தா னேயாகி

மகவாசை உங்களுக்கு மாற்றவந்தான் அல்லால்
புகல்ஏதும் உண்டோநீர் போமின்எனச் சொன்னதற்பின்

தாழ்ந்து வணங்கித் தபோதனரே நாங்கள் இங்கு
வாழ்ந்தோம் வாழ்ந்தோம்இந்த மண்டலத்தில் வாழ்ந்தோமே

நம்பி உரைத்ததுவும் நாங்கள் மறந்துவிட்டோம்
எம்பெருமான் நீர்உரைக்க இன்று தெளிந்தோமே

இப்பேறு பெற்றவர்கள் எங்களைப்போல் இன்னம்இந்த
முப்பே ருலகில் மொழிய ஒருவர்உண்டோ

எம்மில் உயர்ந்தவரார் எம்மிலுஞ் சீரியரார்
இம்மண் தலத்தவரில் என்றே மனந்தேறித்

தந்தையுந் தாயுந் தனையன்என எண்ணுமல்
முந்தை முதல்வன்என முக்கால் வலஞ்செய்து

சேவித்து நாம்இந்தச் சென்மத்தில் முத்தருடன்
பாவித்தோம் என்றே பலகா லமும்பகர்ந்து

முன்னைப் பரம்பொருளை மூவா முதலோனைத்
தன்னைத்தான் ஒப்பாம் தலைமகனைத் தத்துவனை

எண்ணிரண்டு ஆண்டாக எறும்புஈக் கடியாமல்
கண்ணின் மணியாகக் காத்திருந்தோம் காவலனை

அய்யா உனக்கே அடைக்கலஇப் பாலன்என
கையால் மதுர கவிக்குக்காட் டிக்கொடுத்து

திங்கள்மணி மாடத் திருக்குருகூர் சென்றடைந்து
திங்கள்தொறுந் திங்கள்தொறுந் தென்குருகை மாநகரில்

இந்துநுதன் மாதும் இறைவர் பெருமானும்
வந்துவந்து போற்றி மதுரகவி யைப்பணிந்து

நீர்செய்த பாக்கியம்இந் நீள்நிலத்தில் செய்தவரார்
பார்செய்த பாக்கியமாம் பாவலர்கள் கோமானை

இடைவிடா தாராதித் தேத்தினீர் எங்களுக்கு
உடையவர்நீர் அல்லால் ஒருவர்ண்டோ என்றுரைத்து

மீன்முத லாகமுன்னம் மேவும்அவ தாரங்கள்
ஆனதுஎல்லாம் பாமாறன் அன்னோர்க்குக் காண்பித்து


சேவைபிர சாதிக்கத் தெரிசித் தவர்இருக்க
ஆவதொரு கோவில் அமைப்போம் இனிஎன்ன

பொற்கோயில் உண்டாக்கிப் பூசனைசெய் தொண்டருக்கு
முற்கோ இவர்கள்என முத்திநிலை வீடுபெற்றார்

காலங் குறித்திருக்குங் கண்ணன் பரந்தாமன்
ஞாலங் குறித்தேத்த நான்சொல்ல வேண்டும்என

மேரு கிரிமுகட்டின் மின்பூத்த மேகம்என
வாருதியில் உற்பவித்த வாரீச மங்கையுடன்

புள்அரசில் தோன்றிப் பொலியமலர்க் கண்விழித்து
வள்ளல்மணி வாய்திறந்து மங்கலச்சொல் லால்புகழ 280
சிலைக்கோல நெற்றித் திருமாது கேள்வர்
இலைக்கொருவர் ஆகி என்னைப்பாடு என்னைப்பாடு
என்னத் தமக்கேற்ற எம்பெருமான் யாவரையும்
பன்னத் திருப்புளிக்கீழ்ப் பாடிஉவப் பாக்குவித்து
அந்தாதி யாகி அதிகரிக்கும் பூதலத்தோர்
சிந்தா குலம்தவிர்க்கும் தெய்வப் பிரபந்தத்தில்
ஓராத சிந்தை உலகத்துச் சம்பந்தஞ்
சேராமல் வேண்டும் திருவித்தம் நூறும்
பனுவல்தெரி நீத்தார் பணியும்மா லின்குணங்கள்
அனுபவிக்கச் செய்ததிரு ஆசிரியம் ஏழும் 285
அந்த அனுபவத்தால் உண்டாம் அவாஎல்லாம்
முந்தஉரை அந்தாதி முத்தமிழ்எண் பத்தேழும்
தங்கும் அவாவுக்குத் தகுதியாம் ஈச்வரனை
இங்குவந்து சேர இசைத்ததிரு வாய்மொழியில்
ஏய்ந்தஒன் றும்பத்தில் இசையும்இரண் டாம்பத்தில்
ஆய்ந்தடையத் தக்கோன் அருள்மாயன் என்றதுவும்
திருத்தியமூன் றும்பத்தில் செஞ்சொல்நா லாம்பத்தில்
அருத்திஉயிர் நிலையை ஆம்படியே சொல்லுவதும்
இயலுமஞ் சாம்பத்தில் இசையும்ஆ றும்பத்தில்
உயிர்அரியைச் சேர்தற்கு உபாயம் உரைத்ததுவும் 290
தீட்டும் ஏழாம்பத்தில் சீர்திகழ்எட் டாம்பத்தில்
வீட்டு வழிக்கு விரோதம்அறக் கூறுவதும்
தக்கஒன் பதாம்பத்தில் சாற்றியபத் தாம்பத்தில்
மிக்கபலம் உண்டாகும் விஸ்தாரம் பேசுவதும்
பண்ணமுதம் ஊறப் பகர்ந்தஒன் றும்பத்தில்
கண்ணனே காவல் கடவுள்என்ற கட்டுரையும்
சொல்லால் வகுத்துத் தொகுத்தஇரண் டாம்பத்தில்
எல்லார்க்கும் மாலே இனியன்என்ற கட்டுரையும்
நாவின்மது ரஞ்சுரக்க நாட்டியமூன் றும்பத்தில்
ஆவிநெடு மாலை அனுபவிக்கும் என்றதுவும் 295
விரிதிரைநீர் மண்டலத்து வேட்டநா லாம்பத்தில்
அரிபிரிய மாக அடையும்உயிர் என்றதுவும்



திருக்குருகூர் என்ற ஆழ்வார்திருநகரி ஸ்வாமி பொலிந்துநின்ற பிரான்

போதுதொறும் தொண்டர் புகலும்அஞ் சாம்பத்தில்
ஓதும் உபாயம் உயிர்க்குஅரியே என்றதுவும்
உய்யும் படிக்கே உரைக்கும்ஆ றாம்பத்தில்
செய்யும் உபாயந் தெரியும்வகை செப்புவதும்
பெரும்புவியோர் வாழப் பிறந்தஏ ழாம்பத்தில்
விரும்புவதில் உண்டாம் விரோதநிலை செப்புவதும்
சந்ததமும் அன்பர் தரிக்கும்எட் டாம்பத்தில்
அந்த விரோதம் அழியும்எனக் கூறுவதும்
ஓதினால் முத்தி உதவும்ஒன் பதாம்பத்தில்
ஆதியான் நாள்தோறும் ஆம்பலத்தைச் சொல்லுவதும்
திவாகரனைப் போல்உதையஞ் செய்தபத் தாம்பத்தில்
அவாஅறுத்து வீட்டை அடைந்தமையே சொல்லுவதும்
புகுமூரன் நாதமுனி பூதூர் முனிவன்
தகுமூர் நமக்கிவையே தான்என்னச் சிந்திப்பான்
மட்டோ விடுந்தாம மாறன்அரு ளிச்செயலை
பட்டோலை இட்டபிரான் பட்டோலை கொண்டதுஎல்லாம்
நீள்நிலத்தில் நின்றதற்பின் நேமித் திருக்கரத்தான்
சேணிலத்தில் நின்றும் திரும்பி எழுந்தருளி
முப்பத்து முக்கோடி தேவர் முனிவர்குழாம்
எப்பத்தி தோறும் இறைஞ்சஎதிர் தோன்றினான்
திருவாணை யிட்டுஉன் திருவாணை கண்டாய்
தருவாய் பரமபதந் தந்துஒழியப் போகேல்
அமலா எனமறிக்க அச்சுதானந்தன்
கமலா சனனே கடல்ஞாலம் எல்லாம்
இன்னம் பிறந்துஇறந்தால் ஈடேற்றம் உண்டாமோ
உன்அன்பு அவற்கே உதவும் பொருட்டாக
பொய்கைமுதல் ஆலானோர் புகன்றதுவும் நீர்அருளிச்
செய்ததுவும் பின்னோர் தெரிந்துரைக்கும் பாடல்களும்
பண்பால் உபதேசம் பண்ணும்எனப் பூமடந்தை
நண்பா அடியேற்குஇந் நாடுபிடி யாதுஎன்ன
கண்ட மதுரகவி காரிமாறா எனையும்
கொண்டுஅகன்றால் நாயேன் குறைமுடியும் என்றுரைத்த
மெய்அன் பனைநோக்கி மேதினியில் உள்ளோர்க்கு
செய்ய மறைத்தமிழைச் செப்புவதுஆர் நீஅல்லால்

அந்தரங்கர் உண்டோ அகிலத்தில் வாழ்திஎன
எந்தை பெருமானே இருக்கமுடி யாதுஎன்ருன்

வாழ்வான தண்துழாய் மாலைப் பொலிந்துநின்ருர்
ஆழ்வார்கள் கோமானே ஆதரித்துஉன் பால்அடைந்த

இந்த மதுரகவி ஏங்கிக் கரைந்துருகி
நைந்துதடு மாருமல் நாம்உரைத்த வண்ணமே

இத்தலத்தில் வாழ்ந்தருளும் இன்றுமுதல் உம்முடனே
நித்தியமா கப்பொலிந்து நிற்போம் எனவாழி

நாரணன்ஆ திப்பிரான் நாட்டும் படிதிருந்தி
ஆரண முத்தமிழ்ஓர் ஆயிரமும் பாடவல்லான்

மதுரகவி சிந்தை மருளாத வாறே
சதுர முகமலர்ந்து தண்ணளியால் நோக்கி

நாம்உனக் குத்தஞ்சம் நமக்குநீ யேஉலகில்
ஆமுதல்வன் என்றே அபையத்தம் செய்தருளி

முன்கங் கையின்பால் முழுச்சுடராய்க் கண்டதிலும்
பின்புபதி ஞறு பிருயந் தொழுததிலும்

பேராசை மிக்காகிப் பேரா யிரம்உடைய
நாரா யணனில் நமக்குஇவனே தெய்வம்என

மஞ்சன நீராட்டி மலரால் அருசித்து
தஞ்சம் அடியேற்குஉன் சரணர விந்தம்என

நாவுக் கமுதுஊற நாலுகவிப் புலவோர்
பாவுக்கு அணியாகப் பாடியபத் துப்பாட்டும்

முன்ஆழ்வார்நால்வர் மொழிந்த திருமொழியும்
பின்ஆழ்வார் ஓர்ஐவர் பேசும் திருமொழியும்

திருவாய் மொழியும் செகத்துளோர்க்கு ஓதி
இருநூற்று நாற்பதாண்டு இங்கிருந்து வாழ்ந்தருளி

உற்பவித்த சன்மத்து உடலோடும் வைகுந்தப்
பொற்பதியில் ஏகிநித்தர் புத்தேளி ரேயாகி

இருந்தருளும் மாறன் இவன்ஒப்பான் என்பான்
வருந்தின மட்டாக மவுனித்து இருப்பதே

சீராகும் என்றே திருப்புளிக்கீழ் வீற்றிருந்தான்
நாரா யணன்ஆதி நாதன் அரவணையான்

வைகுந்தவாஞட்டில் வாழ்அச்சு தானந்தன்
வைகுந்தம் ஊரில் மறைத்தமிழ்நூல் வந்ததனுல்

மண்ணினுர் தங்கள்தங்கள் வாக்கினுல் உச்சரியார்
எண்ணி நினையார் நினைத்தால்யாம் இறப்போம்என

அத்தன்மை யால்இறந்தது ஆரண நா லாயிரமும்
பத்தருக்கு முன்போலப் பாலிக்க வேண்டும்என

வந்தசே னைக்கதிபர் வாசற் கரிமுகருஞ்
சுந்தரத்தோள் மன்னுர் தொண்டரடித் தொண்டாகி

ஞானியர்கள் தீபம்என நாதமறை மேகம்என
ஆனிமா தத்தில் அநுடத் திருநாளில்

மின்னவரும் பொன்மதில்சூழ் வீரநா ராயணமாம்
நன்னகரில் ஸ்ரீரெங்க நாதன்எனத் தோன்றி

அதிகமுனி நாதமுனி யாகிநெடு மாமால்
பதிகள்தொறுஞ் சென்று பணிந்துதொழும் அன்னுளில்

ஆராவமுதுஉவந்த ஆரா வமுதுபத்தும்
ஓரா யிரத்துக்கு உரைமோர்இது என்றுணர்ந்து

மால்வடிவாய்த் தோன்றும் வயிணவர்கள் பால்ஓதி
நூல்வடிவாய் வேதம் நுவலும் குருகூரன்

சன்னிதியில் ஏகிச் சதுரன் மதுரகவி
சொன்னபத்துப் பாட்டும்அவன் தொண்டர்உப தேசிக்க

நூலா கியகண்ணி நுண்சிறுத்தாம்பு ஆதியாய்
மேலாக அன்பவரை விண்ணப்பஞ் செய்துசெய்து

நன்னீர்த் திருப்புளிக்கீழ் நாற்பத்து நாள்இருந்து
பன்னீரா யிரம்உருவாய்ப் பத்தியுடன் உச்சரிக்க

மண்முன்னே செய்திருந்த மாதவத்தோன் நாதமுனி
கண்முன்னே வந்துஉன் கருத்துஏது எனக்கேட்க

பேறளித்து நாவீறு பெற்றமகிழ்ச் சுடரே
கூறரிய வேதக் குலத்தமிழ்ஓர் ஆயிரமும்

ஒன்பதின்மர் ஆகி உரைத்தமூ ஆயிரமும்
என்பரமே கட்டுரையும் என்றுஇருபா தத்துஇறைஞ்ச

நாலா யிரந்தமிழும் நாதமுனிக் குப்பகர்ந்து
மால்ஆழி சங்குஎழுதி மந்திரம்ஓர் எட்டெழுத்தும்

சித்திரையா னுக்குஉபதே சித்தபடி போதித்து
முத்திரைக்கை மோன முனிவனுட் கொண்டருளி

அத்தால் வெளியிட்டு அருளும்இந்தப் பாடல்முற்றும்
இத்தா ரணியோர் இனிஉரைக்க நேசித்தால்

தாம்உள்ள நாள்எல்லாம் தத்துவஞா னஞ்சிறந்து
பூமுதல்வன் தீட்டும் பொறிபழுது வாராமல்

செல்வத்தர் ஆகித் திருநாட்டு அரசாகி
நல்வரத்தை நல்கும்என நங்கைகுமா ரன்கருணை

மாரி மாருது மகிழ்ந்து வரங்கொடுக்க
வாரி மாருதபுவி வாழ்ந்ததுஎன வாழ்ந்தனனே. 350

சுவாமி நம்மாழ்வார் தாலாட்டு முற்றும்.

நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு.

அரங்கம்உறை யூர்தஞ்சை அன்பில் கரம்பனூர்
புரங்கட்திருப் புள்ளம் பூதங் குடிதிருப்பேர் 1

சிரங்கட்திரு வெள்ளறையுஞ் சிந்தைஅமு தூற்றுஇருக்க
பரங்கொள்நெடு மாமுகிலைப் பாடும் பராங்குசனே

ஆதனூர் சீரார் அழுந்தூர் சிறுபுலியூர்
தாதவிழு மழுஞ்சேறை தலைச்சங்கை நாண்மதியம்

காதல்அருங் குடந்தை கண்டியூர் விண்ணகரம்
வேதியர்சேர் கண்ணபுரம் விரும்பியநம் மாழ்வாரோ

வயலாலி நாகை வழங்கூர் திருநறையூர்
வியலாரு நந்திபுர விண்ணகரம் இந்தளூர் 5

குயிலார் திருச்சித்திர கூடஞ்சேர் காழிநகர்
புயல்போல மேனியரைப் போற்றியநம் மாழ்வாரோ

கூடலூர் கண்ணங்குடிக் கண்ணமங் கைதிருத்
தேடுங் கவித்தலமுந் திருவெள் ளியங்குடியும்

வாடை கமழும் மணிமாடக் கோயில்முதல்
பாடவல்ல செஞ்சொல் பத்மா சனத்தானே

மாங்குயில்கள் வாழுங்கா வளம்பாடி வண்புருடை
தேங்குமிகு செம்பொன்செய் கோயில் திருத்தெற்றி

வேய்ங்குழலார் வைகுந்த விண்ணகரம் மால்விரும்ப
பாங்குடனே முத்தமிழ்ச்சொல் பாடியநம் ஆழ்வாரோ 10

அரிமேய விண்ணகரம் ஐம்பொன் மணிக்கூடம்
பரன்மெய் பார்த்தன் பள்ளிதிருத் தேவனூர்

தருமேவு வெள்ளைக் குளமுட்டந் தத்துவமால்
திருவாய் மொழிஉரைக்கும் தென்குருகை ஆழ்வாரோ

சோலைமலை கோட்டியூர் தோன்றும் திருமெய்யம்
வேலையணை புல்லாணி மேவுந் திருத்தங்கால்
கோலவயல் தென்மோகூர் கூடல்அணி வில்லிபுத்தூர்
மாலைச் செழுந்தமிழால் வாழ்த்தியநம் மாழ்வாரோ
வளமார் திருக்குருகை வாய்த்ததுலை வில்லிமங்கை
கிளர்ஸ்ரீ வரமங்கை கீர்த்திபுனை தென்பேரை
அளியார்திரு வைகுந்தம் அன்பால் புளிங்குடியும்
துளவார் கருமுகிலைச் சொல்லும் பராங்குசனே
வரகுண மங்கை மதிள்குழந்தை தென்குறுங்கை
அரியதிருக் கோளூர் அனந்தபுரம் செல்வமிகும்
திருவண் பரிசாரம் திருக்காட் கறைஎன்னும்
பரமிசை முத்தமிழால் பாடியநம் மாழ்வாரோ
செய்யதிரு மூளிக் களத்தின் திருப்புலியூர்
துய்யதிருச் செங்குன்றூர் தோன்றும் திருநாவாய்
மைஉலவு வல்லைவாழ் வாய்த்ததிரு வண்வண்டூர்
கைஇலங்கும் ஆழியரைக் கருதுங் கலைக்கடலோ
பாட்டாறு தென்னை வளர்வித்து வக்கோடு
பாட்டா யிரந்தமிழால் பாடியநம் மாழ்வாரோ
தோட்டார் கமலவயல் சூழுந்திரு வாறன்விளை
கோட்டானை மூலம்எனக் கூறுங் கடித்தானம்
அயிந்திர புரங்கோயில் அழகாரும் அத்திகிரி
பயின்றதிரு வெஃகா பரமேஸ்வர விண்ணகரம்
அயன்பரவும் பாடகஞ்சேர் ஆர்ந்த திருத்தங்கல்
பயன்பெறவே முத்தமிழால் பாடியநம் மாழ்வாரோ
நீர்கமழும் வேளுக்கை நிலாத்திங்கட் டுண்டங்
காரகங் கார்வானங் கடிநகரங் கள்வனூர்
ஊரகமே யெய்வளையார் அட்ட புயகரமும்
பாரகத்தில் பாடிப் பதம்பெறும்நம் மாழ்வாரோ
நின்றதிரு புட்குழியும் நீடுதிரு நீர்மலையும்
மன்றல் இடவெந்தை கடன்மல்லை கடிகைவரை
தென்றல் உலாவுந் திருவல்லிக் கேணியென
என்றுந் துதிக்கும் எழில்குருகை ஆழ்வாரோ
வேங்கடஞ் சாளக் கிராமம் வியன்புரிசை
நாங்கணி நைமிசா ரண்யம் நலம்தழைக்கும்

பூங்கமலங் கங்கை கரைகண்டம் பொன்வதரி
ஓங்குசிங்க வேழ்குன்றம் ஓதியநம் மாழ்வாரோ

பரிதி பரமபதம் பேரமுதம் பாற்கடல்சீர்
பொருதும் அயோத்தி பொருந்தும் வடமதுரை

மருவுதிரு வாய்ப்பாடி வண் துவரை நூற்றெட்டும்
பரம்எனவே பத்தியுடன் பாடியநம் மாழ்வாரோ

பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யன் குலசேகர ஆழ்வார் பெரியாழ்வார்

துய்யதொண்டர் தாள்தூளி சொல்பாணன் நல்கலியன்
செய்யுந் தமிழ்அனைத்தும் செப்பியநம் மாழ்வாரோ

மதுரகவி நாதமுனி நல்லமணக் கால்நம்பி
எதிபதிதொழும் பெரியநம்பி ஏற்றியநம் மாழ்வாரோ

ஆரியர் போற்றும்நல் ஆளவந்தார் தொண்டர்தாள்
சீர்பெருங் கச்சிநம்பி சிந்தைசெய்நம் மாழ்வாரோ

திருமாலை யாண்டான் திருவாய் மொழித்தமிழை
திருத்தும் புவியோர்க்குத் திருத்தியநம் மாழ்வாரோ

திருமல்லி நாடுந் திருப்பாவை முப்பதுந்
கருதுந் தமிழ்தன்னைக் காட்டியநம் மாழ்வாரோ

எதிராசர் மனமகிழும் எல்லோரும் வாழ்ந்திருக்க
கொதுகுலமுடன் கோமாறன் கொண்டதிரு வடியிதுவே

கூரத்தில் வாழும்நம் கூரத்தாழ்வான் கொண்டதாள்
வீரத் தமிழை விரித்துரைத்தநம் மாழ்வாரோ

ஸ்ரீவசன பூஷணத்தோன் சிந்தைசெய்யும் தேவாகி
ஆவலுடன் ஆரியர்கள் அடங்கியதுஇவ் வூர்இதுவோ

பொருந்தும் மணவாளமா முனிபோற்றும் புகழிதுவோ
திருந்தும் திருநகரி தினந்தோறும் வாழ்ந்திருக்க

மாதவஞ்சேர் விஞ்சை வரமங்கை மாமுனியும்
பாதம் பரவ அருள்பார்க்கும் பராங்குசனே

அபையம்நல்கும் முத்திரைக்கை ஆழ்வார் அகமகிழ்ந்து
கிருபைபெருகத் தொண்டர்எல்லாங் கேட்குஞ் செவிகுளிர

உபையகவி அப்பா உரைக்கும்இந்தத் தாலாட்டால்
உபையலோ கத்தில்உள்ளோர் உகந்துஊழி வாழியவே

தன்னில் மனமகிழ்ந்து தன்னிலே பூரித்து
நன்னிலையன் ஆகிநின்ற நாதமுனி வன்வாழி
குருகூரன் வாழி கோகனகச் செவ்வாயன்
மருமலர் துழாயணியும் மால்ஆதிநா தன்வாழி 47

நூற்றெட்டு திருப்பதித் தாலாட்டு முற்றும்.



ஹிலால் பிரஸ், திருநெல்வேலி—6

ஆழ்வார்திருநகரி திருஞாநமுத்திரைக் கோர்வைகளின்

மதிப்புரைகளில் சில.

திருநாராயணையங்கார் ஸ்வாமி, செந்தமிழ் பத்திரிகாசிரியர், மதுரை.

தமிழிலக்கியங்களில் தலைசிறந்தவற்றுள் கம்பர் இயற்றிய இராமாவதாரமும் ஒன்று. தமிழ் நாட்டுள் யாவரும் இதன் நடையழகு, சொல்லின்பம், பொருளாழம், அணிநயம், சுவைநயம், கற்பனை, அரசியல், ஒழுக்கநெறி, அறவுரை, வீரவுரை முதலியவற்றில் ஈடுபட்டு இதனையே பெரிதும் பயில்வாராயினர். இதனைப் பழைய ஓலையேட்டுச் சுவடிகளோடு ஒப்புநோக்கி நன்கு ஆராய்ந்து பதித்து வெளியிட முயன்று வருவாருள் **திரு பெரியன் ஸ்ரீநிவாசையங்காரவர்களும்** ஒருவராவர். இவர் பெருங்குடிப் பிறப்பும், அருந்தமிழ்ப் பயிற்சியும், பற்றும் உடையவர். இவருக்குக் கிடைத்த ஓலைச் சுவடிகள் இருநூறு வருடங்களுக்கு முன் ஆழ்வார்திருநகரியில் இருந்த ஒரு புலவரும், பிறரும் எழுதியவை. **" ஆழ்வார்திருநகரி ஏடுகள் பதிப்போர்க்கு மிகவும் உபயோகப் படத் தக்கன. பழந்தமிழ் நூல் வெளியீடுகளுள் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு முதலிய நூற்பதிப்புகளுக்கு ஆழ்வார்திருநகரி ஏட்டுப் பிரதிகள் மிகவும் உபயோகமாயிருந்தன" என்பது ஐயரவர்கள் எழுதிய முகவுரையால் அறிந்தது.** இந்நூற் (பாலகாண்டம்) பரிசோதகரான வித்வான் ராவ்சாஹிப் ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் பரந்த ஆராய்ச்சியும், விரிந்த புலமையும் வாய்ந்தவர்கள். பல தமிழ் நூற்பதிப்புக்களைச் செவ்விதின் ஆராய்ந்து வெளியிட்டவர்கள். இவ்வாறு தகுந்த சுவடிகளின் உதவி கொண்டு சிறந்த புலவரால் இதனைப் பரிசோதித்து வெளியிடுவித்த திரு பெரியன் ஸ்ரீநிவாசையங்காரவர்களுடைய தமிழ்ப்பணி பாராட்டத் தகும்.

வித்வான் மு. இராகவையங்கார் அவர்கள் 16—10—'42

தேவரீர் அன்புடன் அனுப்பிய அயோத்தியா காண்டப் பதிப்பின் பிரதி கிடைக்கப் பெற்றுப் பரம சந்தோஷம் அடைந்தேன். ஆதியில் சங்கல்பித்த அரிய கைங்கர்யத்தை நிறைவேற்றிவரும் தேவரீர்க்கு மென்மேலும் ஊக்கமும், சௌகரியங்களும் அமைத்துதவும்படி எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன். இப்பதிப்பு அநேக சிறந்த பாடங்கள் கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகின்றது. தேவரீருடைய பிதிர் அபிமானமும், பாஷாபிமானமும் தமிழ் நாட்டவரால் கொண்டாடத் தக்கன. தங்கள் வெளியீட்டால் கம்பராமாயணத்தின் பழைய அமைப்பும், அரிய பாட பேதங்கள் பலவும் விளங்குதலால் ஆராய்ச்சி செய்து கொள்வதற்கும் பயன்படுமென்பதில் ஐயமில்லை. ஏனைய காண்டங்களும் தங்கள் பெரு முயற்சியால் வெளிவருவதை தமிழ்நாடு எதிர்பார்க்கக் கூடும். மேலும் இவ்வரிய தொண்டைத் தொடர்ந்து நடத்திப் பூர்த்தி பெற வைக்கும்படி தமிழ்த் தெய்வமான ஸ்ரீ ஆழ்வாரைச் சரணம் புகுகிறேன்.

வித்வான் ரா. இராகவையங்கார் ஸ்வாமி 17—10—'42
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.

தேவரீர் கிருபை கூர்ந்துதவிய **கம்பராமாயண பாலகாண்டம்** எய்தப் பெற்று மகிழ்கூர்ந்தேன். **முன்னைப் பிரதிகளினும் அதிகமான திருத்தங்கள் இருத்தல் கண்டு மனம் உவக்கின்றேன்.**

முதுபெருங்கவி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்
புத்தேரி, 12—7—'43

ஆழ்வார்திருநகரி தமிழ் நாட்டின் நடுநாயகமான ஊர் என்பது பண்டை வரலாறுகளால் நன்கு தெளிவாகின்றது. ஆதிகால முதலே அங்கு தமிழ் வித்வான்கள் பலர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். **ஆழ்வார் திருநகரி ஏட்டுப் பிரதிகளுக்கு எங்கும் விசேஷ மதிப்பு உண்டு. அந்த ஏட்டுப் பிரதிகளைத் தாங்கள் தக்க அறிஞர்களைக் கொண்டு அழகான முறையில் வெளியிடச் செய்திருப்பது மிகவும் பாராட்டற்குரியதாம்.** ஒரு பழைய ஏட்டுப் பிரதியைப் பரிசோதனை செய்து யாவரும் எளிதில் கற்கும்படி நல்ல முறையில் வெளியிடுபவருக்கு ஒரு பழைய திருக்கோயிலை ஜீரணோத்தாரணம் செய்த பெரும் புண்ணியம் உண்டென்பது பெரியோர்கள் கண்ட உண்மை.

தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர். பல்கலைக் கழகம், சென்னை. 1—3—'44
ஸ்ரீ ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள், B. A., B. L.

இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகட்கு முன்பு தொடங்கிச் செந்தமிழன்னையைப் போற்றி தமிழ் நாட்டிற்கும் இலக்கிய உலகிற்கும் அரிய தொண்டுகள் இயற்றி வந்த பெருமுது நகர்களுள் குருகூர் எனப் பெயர் பெற்ற ஆழ்வார்திருநகரி தலைசிறந்து விளங்குவதாகும். இங்குச் செழித்த ஆராய்ச்சித்துறையாளர்களின் நன் முயற்சியின் மூலமாகவே பண்டைத் தமிழ்இலக்கியங்கள் பலவும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. டாக்டர். **உ. வே. சாமிநாதையர். மஹா வித்வான் ரா. ராகவையங்கார்** முதலியோர்களுக்குப் பண்டைத் தமிழ்க் கருவூலங்கள் அகப்பட்ட புண்ணிய ஸ்தலம் இதுவேயாகும். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு வரை இந்நகரினர் குன்றாத ஊக்கங்கொண்டு தமிழ் கற்றுத் தமிழ்க் கருவூலங்களைப் பேணி வந்தனர். தமிழ் இலக்கிய சரித்திரம் எழுதப் புகுவார் இத்திருப்பதியின் இலக்கிய வாழ்க்கையை மறந்துவிட முடியாது.

எனவே இப்பிரதேசத்திலுள்ள பிரதிகள் வித்வப் பரம்பரையினருள் ஒரு சாராரால் மரபு நெறி தவறாது எழுதப்பட்டனவாம். **இவற்றுள் எல்லாம் தலைசிறந்தவை ஆழ்வார்திருநகரிப் பிரதிகளேயாகும். ஆகவே, அந்த தேசத்துப் பிரதிகளைத் தாங்கள் பயன்படுத்தி வெளியிட்டிருக்கும் இக் கம்பஇராமாயணப் பதிப்பு மிகவும் பயன்படத் தக்கது என்று உறுதியாகக் கூறுவேன்.**

ஸ்ரீ கி. வ. ஜகன்னாதன், B. O. L., ''கலைமகள்'' ஆசிரியர், சென்னை

குலத்தினால்பெரியன் குணத்தினால்பெரியன் கொழிதமிழ் வளத்தினால்பெரியன்
நலத்தினால் பெரியன் அன்பினால் பெரியன் நாயகன் இராகவன் தாளில்
பலத்தநல்பத்தி பழுத்ததண்மனத்துப் பண்பினால்பெரியன் சீர்க்குருகூர்
நிலத்தினில்மாறன் அடிக்குடியாகும் நிறைவினால் பெரியனும்இயல்போய்.
தேனின்வா சத்தால் பெரியமா மகிழின் திருஅலங் கல்புனை ஆழ்வார்

மானநல் அடிக்கு எத்தமிழ்ப் பிரபந்தம் வையகத் திருப்பினும் அதனை
ஆனநல் அன்போடு அச்சினில் பதிக்கும் ஆர்வமீக்கொளப் பலநூலை
வானமா மழைஎன்றே தரும் பெரிய வள்ளலே மற்றிது காண்க.
செந்தமிழ் நூல்கள் செவ்விதில் அச்சில் திகழ்தர வேண்டும் என்றெண்ணி
இந்தமா நிலத்தில் யார் இதை ஆற்ற ஏற்றவர் என்பதும் நினைந்து
சொந்த ஆற்றலினுல் பொருளினுல் தொண்டினுல் திறம்பட அவற்றைச்
சந்தமார் தரவே விளக்கும்நின் இயல்பு தரணியில் எவர்செய விழைவார்.

ஸ்ரீ K. சுப்பாராவ், ஆசிரியர், கும்பகோணம்

ஆழ்வார்திருநகரிப் பிரதியில் அநேக சிறந்த பாடங்கள் கிடைத்தன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக ஆரண்ய காண்டப் பாடங்கள் ஒரு பெரும் நிதிபோல் அமைந்துள்ளன. என்போன்ற கம்பன் கலைப்பித்தருக்கு இவை ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தாங்கள் மேற்கொண்ட இவ்வுத்தம கைங்கர்யத்தின் பெருமை வருங்காலத்தில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆழ்வார் அருளால் கிஷ்கிந்தா காண்டமும், ஏனைய காண்டங்களும் விரைவில் அச்சில் ஏறுமென நம்புகிறேன்.

ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் சர்வதாரி ௵ ஆனி மீ

கற்ருர் விரும்பும் காவியம் ஆக்குவதில் காளிதாசனும், மேலைநாட்டு மில்டனும் கைதேர்ந்தவராவர். நாட்டார் நயக்கும் நாடக நன்னூல் இயற்றுவதில் செகப்பிரியர் (Shakespeare) சிறந்தவராவர். இம்மூவரும் ஒருவராய் உருவெடுத்த இயல்புடையார் கல்வியிற் பெரிய கம்பராவர். கலைஞனின் கருத்தினை அவன் நிலையில் நின்று உண்மைக் கவிதையின் உருவை அறிய அந்நூலைப் பதிப்பிக்கும் அறிஞராவார் பலர் முயன்று வருகின்றனர். அத்தகைய பதிப்புக்களில் இதுவும் ஒன்ருகும். ஏனைய பதிப்புக்கள் பலவற்றினும் இதன்பால் சிறந்த இயல்புகள் சில காணப்படுகின்றன. பொருத்தமான பாடங்கள் அமைந்து பொலிகின்றன.

வாணிதாஸன் கூறியவை

மால் ஊட்டும் பிறவிஎனும் பெருங்கடலைக் கடந்து உயிர்கள் மாலைச்சேரப்
பால் ஊட்டும் பசுந்தமிழில் பரமகுரு வகுளம் ஒளிர் பகவன் ஏற்கும்
தாலாட்டின் சுவைஅறிந்து மனம்உருக அச்சேற்றித் தரணிக்கு ஈந்த
கோலாட்டும் பெரியன் எனும் மரபுஉதித்த கோதில்குணக் கொழுந்து நீயே

மயக்குறு மாமறை மாசு நீங்கிடக் கயக்கறு போதம் கனிந்து தெளிய
கோதில் கனிஎன குணபரன் தன்னைத் தீதில் திருவாய் மொழியினில் திரட்டிய
பகவன் பெரியன் பராங்குசன் சரிதம் தகையுறு நெஞ்சம் தழைக்க அருளிய
தேவேச பாரதித் தெருளோன் பெயரை நாவி றன்தன் நல்புகழ் தன்னுல்
உலகுக்குஅளித்த ஒருபெருங்குணத்தோய் நிலவும்செல்வம்நீடிசைக்
குலத்துப்
பெரியன் ஸ்ரீநி வாஸப் பெரியோய் அரிது நின்செயல் அனைத்தும் ஓங்குக
கைம்மாறு எவன்செயக் கருதுவன் வாழி அம்மா பெரிதுன் அன்பின் திறனே

24—9—'45 தென்திருப்பேரை அபிநவ காளமேகம்
ஸ்ரீ அநந்த கிருஷ்ணையங்கார் ஸ்வாமி (பி. ஸ்ரீ. சிறியதகப்பனர்)

சேடனும் புலவர் கோன்முன் செய்பராங் குசன்தன் காதை
நாடகச் சுதையுட் கொண்டே நல்அறி வாளர் யாரும்
ஏடவிழ் வகுளத் தாரான் இன்னருட்கு இலக்காய் வரழ்வான்
பீடமை சீநி வாசப் பெரியனே வெளியிட் டானே.

காரணைய மேனியன் ஸ்ரீபூமி நீளையின் காந்தனும் ஆதிநாதன்
கழல்கஞ்சம் என்றுமே தொழுதுகக் குஞ்சில கவிச்சக்ர வர்த்தியான
காரிமகிழ் மாறனுக்கு ஏற்றதாய் எவ்விதக் கவினும்உமுறு பிள்ளைத்தமிழ்
கவிவாணர் யார்க்குமேயின்பம் பயக்கும்நல்கவிகள் நிறை யொருநாலினைப்

பேரினைவிளக்காமல் ஒருபெரியபுலவர்கோன் பெருமையாய்ச்செய்தவிதனைப்
பெரியனும் சீனிவாசப் பெயருளான் சகல பேறுபெரு வள்ளல்குணன்
பாரினிற் பற்பல வயிணவப் பிரபந்த பந்திகளை வெளியாக்கிய
பான்மையன் புலவர்புகழ் மேன்மையன் பரவவே பதித்தனன்
வளவச்சிலே.

N. R. கிருஷ்ணஸ்வாமிஅய்யங்கார் அவர்கள்

அட்வகேட், மதுரை 17—5—1951

தேவரீர் அடியேனுக்குக் கொடுத்துதவிய கம்பராமாயணம் 4 காண்டங்களையும் படித்துப் பார்த்தேன். படலங்களின் பெயர் அமைப்புகள் மிகப் பொருத்தமாகவும், அந்தந்த விஷயத்துக்கு ஏற்ற தாகவும் இருக்கின்றன. ஆங்காங்குள்ள பாட வேறுபாடுகளும் சில பொருத்தமாகவும் சுவைமிகுந்த பொருள் தருவனவாகவும் அமைந் துள்ளன. சில பாடங்கள் வலிந்து பொருள் கொள்ள வேண்டியவையா யிருக்கின்றன.

கம்பர் காலத்துக்குப் பின் அவர் இயற்றிய பெருங் காவியமாகிய இராமாவதாரம் ஓர்மையோடும் ஆர்வத்தோடும் காப்பாற்றிக் கற்கப் பெற்ற இடங்களுள், ஆழ்வார்திருநகரி தலைசிறந்த கல்விக்கூடமாகும். அதன்கண் விளங்கிய பெரும் புலவர்கள் கற்றுத் தேர்ந்த சுவடிப் பிரதியை அதிற் கண்டவாறு புத்தகமாய் அச்சேற்றி உதவியது தமிழ்க் கல்விக்கும், தமிழ் நாட்டுக்கும் தேவரீர் செய்த பெரும் தொண்டாகும். இக்ஷ்வாகு வம்சத்தை ராமன் தன்குலம் ஆக்கிக் கொண்டான் என்று ஹனுமான் முடிவு கட்டியதுபோல் தேவரீர் வம்சத்தில் தேவரீர் பெரியன் ஸ்ரீநிவாசையங்கார் குலமாக ஆக்கிக் கொண்டு விட்டீர்கள். நம்மாழ்வார் தாலாட்டு முதலானவை அடங்கிய ஸம்புடமும், நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் முதலிய நூல்கள் அடங்கிய மற்ற ஸம்புடமும் படிக்கப் படிக்க இன்பம் தருவனவாயும், தெவிட்டாக் கனிகளாயும் அமைந்து பண்டித பாமர சாமான்யமாய் எல்லோருக்கும் இன்பம் தருவனவாய் அமைந்திருப்பது இவைகளின் மிகவும் குறிப்பிடத்தக்க பெருமையாகும்.

Sri Jagadacharya Simhasanadhi Pathi
P. B. Annangara Chariyar Editor Granthamala Congeevaram
ஸ்ரீ மான். உ. வே. பெரியான் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமிஸன்னதியில்,
(14—4—'48) அடியேன் செய்யும் விண்ணப்பம்.

பரமகிருபையுடன் தெந்திருப்பேரை ஸ்வாமி மூலமாக அனுப்பித்தந்த மூன்று புத்தகங்களும் திருமுகமும் சென்னிக்கு அணியாயின. உலகுக்கு இது மிகப்பெரியதொண்டு. உள்ளடங்காத மகிழ்ச்சியே அடியேற்கு, தேவரீர் எடுத்துக்கொண்ட கைங்கர்யத்திற்குப்பல மடாதிபதிகள் கைகொடுக்க முன்வருவார்கள். எளிதாக நிறைவேறக் கூடியது. இவ்வளவே விஞ்ஞாபித்து நிற்கின்றேன் க்ஷமித்தருளவேணும் தாஸன்.

அண்ணுமலை பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித்துறை

விரிவுரையாளர் திரு. கி. இராமாநுஜய்யங்கார்

கம்பன் எனும்அக் கலைக்கடல்முன் கருணைக் கடலெல்என்று உலகுதொழும்
நம்பி புகழால் இராமாவ தார நூலாம் நல்லமுதம்
இம்பர் அறிஞர் பருகிடுமாறு ஈந்ததன்சீர் எடுத்துஇயம்பல்.
கும்ப முனிக்கும் அறிதுஎன்றுல் யாரேகூற வல்லாரே.

மற்றுஅந்நூலில் வரைவோரால் மகிழ்ந்துகற்போ ரால்பிறரால்உற்றவேறு
பாடுபல அவற்றுள் கம்பன் உரையிது என்று
இவற்றைநாளில் அறிதல்அரிது இந்தநிலையில் எழில் குருகூர்க்
கற்றபெரியோன் எழுதிவைத்த இந்நூற்சுவடி கண்டுஉவந்து.

சீரார் தமிழ்நாட்டு ஆங்காங்குத் திகழும் பலஊர்ச் சுவடி களுள்
ஏரார்குருகூர்ச் சுவடிகளே தமிழ்மாமக்கட்கு எழில்அணியாய்
பாரோர் புகலும் பழந்தமிழ்நூல் பலவும்பதித்துத் தந்தபெரும்
பேராசிரியர் பெருமதிப்புப் பெற்றபெற்றி பெரிது உணர்ந்து.

தொகுத்துக் கற்றுத் துறைபோய தூயபுலவர் துணைகொண்டு
வகுத்ததுங்கு அவற்றுள் தான்கண்ட வண்ணம்பிழைகள்மலியாது,
நுகத்துப் பகல்போல் நடுநின்று நோக்கும் அறிஞர் பலர்மதிக்க,
மிகுத்தவெண்பொன் செலவிட்டு விரைந்தச்சிட்டு விழைந்தளித்தான்.

வெறியார் சோலைக் குருகூர்வாழ் வெ. நா. ஸ்ரீநி வாசன்என,
நெறிதோ புலவர் பாராட்ட நின்றுன் வாழி நீடுழி

R. P. SETHU PILLAI

Professor of Tamil, University of Madras, 8—10—'54

தமிழ் நாடு பெற்றுள்ள தனிப் பெருங் கலைச்செல்வங்களுள் தலை சிறந்தது கம்பராமாயணம். கவிதைக்கொரு புலவன் கம்பன் என்பது நாடறிந்த உண்மை. ஆயினும் நெடுங்காலமாக நல்லதொரு கம்பராமாயணப் பதிப்பு இல்லாதது பெருங்குறையே. அக்குறையை அகற்ற வந்துள்ளது ஆழ்வார்திருநகரிப் பதிப்பு. நம்மாழ்வார் பிறந்தருளும் பேறுபெற்ற திருநகரில் கம்பர் காவியத்தைப் பொன்னே போல் போற்றும் பெருமை சான்ற புலமைக்குலத்திலே தோன்றிய, பெரியன் ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் பதிப்பித்துள்ள கம்பராமாயணத்தைக் கற்றறிந்தோர் உளங்கனிந்து பாராட்டுவர்.

Copy of The Proceedings of The Director of Public Instruction Madras
Dis. No. 2711/54 Dated 13—5—54

Sub: Books and Publications - 3 Volumes of Kambaramayanam and 2 other Books on Nammalwar by Perian V. N. Srinivasa Iyengar of Alwartirunagari Tirunelveli District brought to notice.

The books mentioned below and Recommended for use in the libraries attached to Schools, Colleges and in Public libraries

3 Volumes of Kambaramayanam (Nos. 357, 358, & 359)
Bala Ayodhya Aranya kandangal Rs 8—00
Kishkinda Sundara Kandangal Rs 6—00
Yuddha Kandam Rs 10—00
Nammalwar 2 volumes of Thirugnana Mudirai Kovai Nos. 360 & : 361):
Nammalwar Thalattu & 5 others Rs 5—00
Nammalwar Pillaithamil & 3 others Rs 3—52
By Perian V. N. Srinivasa Iyengar Copies can had from Perian V. N. Srinivasan, Alwartirunagari, Tirunelveli Dt.

K. R. MANICKAM,
For Director of Puplic Instruction.
Copy Forwarded to:
The Divisional Inspectors, D. E. O, and Inspectors of School.

ஆழ்வார்திருநகரி திருஞாந முத்திரைப் பிரசுராலய வெளியீடுகள்
பதிப்பாசிரியர், பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸன்

ஸ்ரீ நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு நம்மாழ்வார் பொலிந்து நின்ற பிரான் படங்களுடன் மூன்றும் பதிப்பு ரூ. 1 00

ஸ்ரீ சடகோபன் சந்திரகலாமாலை அநந்துவையங்காரால் இயற்றியது. 0 06

ஸ்ரீ சடகோபன்திவ்யசரித்திரம்; மு. இராகவையங்கார் ஸ்வாமியின் திருத்தகப்பனாராகிய ராமநாதபுரம் சமஸ்தான வித்வான்சதாவதானம் முத்துசாமிஐயங்காரென்ற சேஷய்யங்கார் ஸ்வாமியின் மாணுக்கரான ஸ்ரீ தேவராஜபாரதிகளால்; 15 படலங்கள் 185 பக்கங்கள் 1190 கவிகளாக நம்மாழ்வார்வைபவம் முழுதும் கூறுவது. சில பகுதி B. A. க்குப் பாடமாக இருந்தது. 2 00

துலைவில்லிமங்கலம் தேவர்பிரான் சந்திரகலாமாலை ஷெயாரால் 00 6

ஸ்ரீநம்மாழ்வார்பிள்ளைத்தமிழ். குழந்தைப் பருவமாகப்பாடித்துதிப்பது 1 00

திருக்குருகூர் மகிழ்மாறன்பவனிக்குறம். பவனியில் காதலடைந்தவட்கு குறத்திகூறும் குறி. 00 37

குருகூர்ப்பள்ளு, ஸ்ரீசடகோபப் புலவர் இயற்றியது. S. வையாபுரிப் பிள்ளை அவர்கள், முன்னுரையுடன். 1 00

முதலாழ்வார், பெரியாழ்வார் வைபவங்கள். அழகியநம்பிதாஸர் அருளியது. 0 75

தெந்திருப்பேரை திருக்கோளூர் திருப்பணிமாலைகள். S. வையாபுரிப் பிள்ளை முன்னுரையுடன். 0 50

திருவைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ்; மு. ராகவையங்கார் ஸ்வாமி முன்னுரை யுடன். 1 00

ஸ்ரீ பராங்குச நாடகம். சேஷகவி இயற்றியது செந்தமிழாசிரியர் ஸ்ரீ திருநாராயணையங்கார் ஸ்வாமி முன்னுரையுடன் 1 00

தெய்வச்சிலையார் விறலிவிடுதூது, (கல்சிற்பங்களில் சிறந்த திருச்செந்தூர் ரோட்டில் உள்ள கிருஷ்ணபுரம்) கோயில்பற்றியது. S. வையாபுரிப் பிள்ளை முன்னுரையுடன் 1 00

"கம்பராமாயணம்" பாலகாண்டம் (பிரதிபேதங்களுடன் முதல்ஏழு படலங்கள்) *S*. வையாபுரிப் பிள்ளை, *P.N*. அப்புசாமிஅய்யர் பரிசோதித்தது 0 62

ஆழ்வார்திருநகரி சுவடிப்படி "கம்பராமாயணம்", பாலகாண்டம், மு. ராகவையங்கார் ஸ்வாமி 2 00

,, ,, திருவயோத்தியா காண்டம், *A. N*. மகரபூசணமையங்கார் *K*. பக்ஷிராஜையங்கார், பரிசோதித்தது 2 25

,, ,, ஆரண்ய காண்டம் *S*. வையாபுரிப் பிள்ளை, முன்னுரையுடன் 2 25

,, ,, கிட்கிந்தா காண்டம் 2 05

,, ,, சுந்தரகாண்டம் 2 50

,, ,, யுத்தகாண்டம் 10 00

திருக்குருகூர் திருப்பணி மாலை *A. L*. ஆதிநாத பிள்ளை குறிப்புரையுடன் 00 62

சிறுபுலியூர், உலா செந்தமிழ் ஆசிரியர் *T. K*. இராமானுஜையங்கார் ஸ்வாமி குறிப்புரையுடன் 1 50

குருகை மாலை; தவச்சிறப்பு சிலேடையாகஉள்ளது T.K.ராமானுஜயங்கார் ஸ்வாமி குறிப்புரையும் பிறவும்; 1 50

கிருஷ்ணபுரம் திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ் ஷை ஸ்வாமி பரிசோதித்தது 1 50

அநுமான் பிள்ளைத்தமிழ் காழிஅருணாசலக் கவிராயர் இயற்றியது 1 00

அழகர் குறவஞ்சி கவி குஞ்சார பாரதிகளால் 1 50

நம்மாழ்வார் திருநாமங்கள். திருக்குருகூர் அலங்காரமையங்காரால் 1 00

நித்திய பாராயண மலர் திவ்யப்ரபந்த பாசுரப்படி இராமாயணம், கண்ணன் வைபவம், உயிரணி விளக்கு, ப்ரகவிகஇ நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி 0 65

முமுஹூப்படி, நிகமணப்படி முதலிய நித்தியல் அநுசந்திக்க உரியது 0 6

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாசன் பதிப்பாசிரியன் திருஞானமுத்திரைப் பிரசுராலயம் ஆழ்வார்திருநகரி.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி—6